விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 03 செவ்வாய்க்கிழமை (15.02.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 58

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர
தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

## கௌசல்யன் கொலைக்கு கண்டனம் தெரிவிப்பதா

# கொபி அனானுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு

## யுத்தநிறுத்த உடன்பாட்டை புலிகள் செயலிழக்க செய்யும் சாத்தியம் இல்லை

### பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகளிடையே சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக எழுந்துள்ள கருத்து முரண்பாடுகள் சமாதான நடவடிக்கைகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் கூட்டம் ஒன்றில் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே பேராசிரியர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

ஜே.வி.பியினர் ஜனாதிபதியின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாததால் பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளதாக ஜனாதிபதி தற்போது கூறிவருவது கடந்த சில மாதங்களாக எமது நாட்டில் தெளிவாக புலப்பட்டிருந்த விடயமாகும்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏன் இதுவரை (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய பிக்குமார் முன்னணி ஆயத்தம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு ஐ. நா. பொதுச் செயலர் கொபி அனான் கண்டனம் வெளியிட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு தேசிய பிக்குமார் முன்னணி ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. (௧௨ ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் சகோதரர்களின் தலைவர்களுடன் பிரச்சினைகள் குறித்து மனம்விட்டு பேசினோம்


### நேற்றைய சந்திப்புக் குறித்து தமிழ்ச்செல்வன்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இச் சந்திப்பு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சுனாமியினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட நிலைமைகள் மற்றும் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண நடவடிக்கைகள் என்பன குறித்து விரிவாக



## ஜனாதிபதி 20 ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 20 ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மட்டக்களப்பு திரியாய் கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத் திட்டமொன்றை ஆரம்பித்து வைப்பதற்காகவே ஜனாதிபதி அங்கு செல்லவுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியின் மட்டக்களப்பு விஜயத்தை தான் கடுமையாக

இதேவேளை ஜனாதிபதியின் மட்டக்களப்பு விஜயத்தை தான் கடுமையாக எதிர்ப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார். (ச)

வரும் நிவாரண நடவடிக்கைகள் என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

எதிர்காலத்தில் தமிழ் முஸ்லிம் சமூகத்தினருக்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான வழிவகைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இச் சந்திப்பில் (12 ஆம் பக்கம் பார்க்க)



# சுனாமி "பேபி 81" ன் பெற்றோர் மரபணுச் சோதனையில் ஊர்ஜிதம்



(கொழும்பு)

ஒன்பது பெற்றோர்கள் உரிமை கோரிவந்த சர்ச்சைக்குரிய சுனாமி 'பேபி 81' குழந்தை விவகாரம் முடிவுக்கு வந்துள்ளது. கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட மரபணு சோதனை மூலம் பிரஸ்தாப குழந்தை உரிமைகோரிய பெற்றோர்களில் ஜெயராஜ் தம்பதிகளுடையது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



ஆழிப்பேரலையை அடுத்து கல்முனை கடற்கரையிலிருந்து மீட்கப்பட்ட நான்கு மாதக்குழந்தை தம்முடையதே என்று ஒன்பது பெற்றோர்கள் உரிமை கோரியதை அடுத்து விடயம் நீதிமன்றம் வரை சென்றது.

நீதிமன்றிலும் இவ்விவகாரம் சிக்கலானதை அடுத்து உரிமை கோரும் பெற்றோரையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு படுகொலையை கண்டித்து நேற்று நகரில் வாகனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட்ட போராளிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ. சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ். நகரில் நேற்று கண்டன வாகனப் பேரணி நடைபெற்றது.

யாழ். மாவட்ட முச்சக்கர வண்டிகள் சங்கம், தனியார் மினிபஸ் சங்கம், மோட்டார் கார்ச் சங்கம் என்பன இணைந்து இவ் வாகனப் பேரணியை நடத்தின.

நேற்றுக் காலை 11 மணிக்கு யாழ். நகரிலுள்ள முனியப்பர் ஆலய வீதியில் இருந்து நூற்றுக்கணக்கான ஆட்டோக்கள், மோட்டார் கார்கள் என்பனவும் ஆரியகுளம் சந்தியிலிருந்து பெருமளவான மினிபஸ்களும் பேரணியாகப் புறப்பட்டு நல்லூர் கோவில் வீதியிலுள்ள போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தை சென்றடைந்தன.

அங்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை யாழ். மாவட்ட முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் தலைவர் எஸ். சிவராசாவும், யாழ். மாவட்ட மினிபஸ் ஒன்றியத் தலைவர் சிங்க அரியரட்ணமும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி ரொனி பேசனிடம் கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட ரொனி பேசன் கருத்துத் தெரிவிக்கையில்,

சமாதான காலத்தில் இவ்வாறான படுகொலை நடவடிக்கைகள் சமாதான செயற்பாட்டை சீர்குலைக்கும் செயல் எனவும் இவை கண்டிக்கப்படவேண்டிய விடயம் எனவும் நாம் கூறியதுடன் மகஜரிலுள்ள விடயங்கள் குறித்து சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்துவதாகவும் உறுதியளித்தார். (ச-19)

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிவாரண விநியோகம் குறித்து ஆராய மக்களுக்கு உரிமை இருக்கின்றதாம்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு



வழங்கவென இலங்கைக்கு விநியோகிக்கப்பட்ட வெளிநாட்டு நிவாரண உதவிகள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்பது குறித்து ஆராய்ந்து கொள்வதற்கு மக்களுக்கு உரிமை இருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிவாரணங்களைப் பகிர்ந்தளிக்கும் போது ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும். ஆனால் அரசாங்கம் அவ்வாறு ஒழுங்கு விதிகளை கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை என காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இடம்பெயர்ந்த மக்கள் 100 மீற்றர் எல்லைக்குள் வீடுகளைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்க மறுப்பதானது உலக நீதிக்கு எதிரான செயலாகும்.

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முதற்கட்டக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவை உதவித்தொகையாக வழங்குமாறு அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக்கட்சி கோரியிருந்ததாக அதன் பின்னர் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவேண்டும் என்றும் அரசிற்குப் பரிந்துரைத்தது,

இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் தமது இயல்பு வாழ்க்கையினை மீண்டும் அடைய முடியும் என்று தாம் நம்புவதாகவும் மேலும் அவர் சுட்டிக்காட்டினார். (க-4)

# தொழிலை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

ஆழிப் பேரலைகளினால் வேலை வாய்ப்புக்களை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான செயற்றிட்டமொன்றை விரைவில் நடைமுறைப்படுத்த விருப்பதாகத் தொழில் அமைச்சர் அதாவுடசெனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த வியாழககிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் திட்டத்தை நடைமுறைபபடுத்துவதற்காக தொழில் வாய்பபை இழந்தவர்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றது.

தொழில் வாய்ப்பை இழந்தவர்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

குறிப்பாக ஆழிப்பேரலையினால பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க துரிதநடவடிககைகள் தொடர்ந்து மேறகொள்ளப்படுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-8)

# அரச அதிபர் உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

யாழ.மாவட்டத்தில் பணியாற்றும் கிராமசேவையாளரின் கடமைகளில் சிலவற்றை ஒரு சில பிரதேச செயலர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதை நிறுத்துவதற்கு ஆவன செய்வதாக யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் உறுதியளித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டின் கிராம சேவையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு வடக்கு-கிழக்கு மாகாண கிராம சங்க பிரதிநிதிகளுக்கும் அரச அதிபருக்கும் இடையிலான சந்திப்பொன்றிலேயே இவ்வாறு அரச அதிபர் உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது. (ப-35)

# அமெரிக்காவுக்குப் பயிற்சிக்குச் சென்ற ஐந்து கடற்படையினர் தலைமறைவு

(கொழும்பு)

இலங்கை கடற்படைக்கு அமெரிக்கா வழங்கியுள்ள யுத்தக் கப்பலில் பணியாற்றுவதற்கு பயிற்சி பெறுவதற்கென அமெரிக்காவுக்குச் சென்ற இலங்கைக் கடற்படையினர் ஐவர் அமெரிக்காவில் காணாமல் போயுள்ளனர்.

அமெரிக்காவால் வழங்கப்பட்டுள்ள கரேஜஸ் என்ற கப்பல் இவ்வாரம் இலங்கையை நோக்கிப்புறப்படுகின்றது.

இது தொடர்பான நிகழ்வில் கலந்துகொள்ள கடற்படைத் தளபதி தயா சந்தகிரி அமெரிக்காவுக்குச் செல்லத்திட்டமிட்டிருந்தார்.

எனினும் கௌசல்யன் படுகொலையை அடுத்து அரச மட்டத்தில் தோன்றியுள்ள யுத்த பீதியை அடுத்து சந்தகிரி தனது பயணத்தை ரத்துச் செய்துவிட்டு இன்னொரு அதிகாரியை அமெரிககாவுக்கு அனுப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலில் பணியாற்றுவதற்கென இலங்கை கடற்படைக் குழுவொன்று அமெரிக்காவில பயிற்சி பெற்று வருகின்றது.

அக்குழுவிலிருந்தே ஐவர் காணாமல் போயுள்ளனர். இவர்களில கப்பலின் இயந்திர அறை உத்தியோகத்தர் ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்கள் அமெரிக்காவில் எங்கு உள்ளனர் என அறிய முடியாதுள்ளதாக இலங்கைக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

## அலங்கார உற்சவம

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சிவ உதயநாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் தீக்குளிப்பும் நடைபெறவுள்ளன. (ற)

## இராசிபலன்

15.02.2005

(மாசி 03 செவ்வாய்க்கிழமை)

சப்தமி முன்னிரவு 10.00 மணிவரை

பரணி முன்னிரவு 9.06 மணிவரை

இராகுகாலம் 3.33 - 5.03 மணிவரை

சுபநேரம் 11.03 -12.33 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், மாதர் நட்பு. |
| இடபம் | சோம்பல் நிலை, சிந்தனை மிகுதி, முயற்சி தாமதம், பணவிரயம். |
| மிதுனம் | குடும்ப சுகம், தனதானிய சேர்க்கை, தொழில் விருத்தி, காரிய அனுகூலம். |
| கடகம் | பிரபுத்தனம், இஷ்ட சித்தி, நன்கொடை போசனசுகம். |
| சிங்கம் | உத்தியோக பங்கம், வயிற்றுக் கோளாறு, நிர்ப்பந்திக்கப்படுதல், அதிக செலவு. |
| கன்னி | பொருள் விரயம், சரீர பீடை, மனக் கவலை, காரிய தடங்கல். |
| துலாம் | தேக நலன், கீர்த்தி, பொருள் சேர்க்கை, அபூர்வ சந்திப்பு. |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், வாகன சுகம், பொருள் சேர்க்கை. |
| தனுசு | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம். |
| மகரம் | தன்னம்பிக்கைக் குறைவு, தனவிரயம், மாதா சுகம், ரோகநிலை. |
| கும்பம் | காரிய அனுகூலம், போசன சுகம், தேக நலன், மனோ தைரியம். |
| மீனம் | கௌரவக் குறைவு, காரிய தாமதம், பொருள் விரயம், வீண் பகை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

# நிவாரணப் பொருட்கள் கையாடல் கமராவுக்குள் சிக்கிக் கொண்டது

(கொழும்பு)

சுனாமிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிப்படைந்தவர்களுக்கு வழங்கவென வைக்கப்பட்டிருந்த நிவாரணப் பொருட்கள் தென்மாகாண அமைச்சர் ஒருவரால் கையாடப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொருட்கள் கையாடப்படும் போது பிடிக்கப்பட்ட புகைப்படத்தை கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையான சண்டே லீடர் வெளியிட்டுள்ளது.

காலி கோட்டை வளாகத்தினுள் இயங்கும் தென்மாகாண போக்குவரத்து, சக்தி, கூட்டுறவு அமைச்சின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த நிவாரணப் பொருட்கள் அலுவலகத்தின் பின்புறமாக உள்ள பத்து அடி உயரமுள்ள மதிலுக்குமேலால் எடுக்கப்பட்டு பிரஸ்தாப அமைச்சின் உத்தியோகபூர்வ வாகனத்தில் ஏற்றப்படும் போது படம் பிடிக்கப்பட்டது. (ச)

# அறநெறிப் பாடசாலைகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை


(கொழும்பு)

அறநெறிப் பாடசாலைகளை ஊக்குவிப்பதற்கும் அதன் ஆசிரியர்களுக்கு சமாதான நீதவான் பதவியை வழங்குவதற்கும் பௌத்த விவகார அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தீர்மானித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலை ஆசிரியர்களைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி அவர்களுக்கு டிப்ளோமா பட்டங்களையும் பெற்றுக்கொடுக்க தாம் தீர்மானித்துள்ளதாக இரத்தினபுரி மாவட்டத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் தெரிவித்தார்.


அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கென இலவச வைத்திய காப்புறுதி முறை ஒன்றையும் அறிமுகப்படுத்தத் தாம் உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)





ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்ட நிலைய ஆட்சிக்குழு உறுப்பினர்களை முதலாவது படத்திலும், மாதர் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர்களை மறு படத்திலும் காண்க.

(படங்கள் : சுண்டுக்குளி நிருபர்)



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுமார் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் என்பனவற்றை முகமாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவிஸ் வாழ் த.றமேஸ் என்பவர் றோட்டறிக் கழகத்துடாக வழங்கினார். பொருட்கள் கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்: கல்வியங்காடு நிருபர்)

# தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து ஆசிரியர் நியமனத்திற்கு தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா, கல்வியியற் கல்லூரிகளில் 2004ஆம் ஆண்டு பயிற்சி முடித்து வெளியேறி வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குக் கீழுள்ள பாடசாலைகளுக்கு நியமனம் பெறுவதற்குத் தெரிவானோரின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் வெளியாகியுள்ளது. இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நேற்று ஆரம்பமாகி இன்றும் நாளையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை நடைபெறும் நேர்முகப்பரீட்சையில் இன்று தவிர்க்கமுடியாத காரணத்தினால் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றமுடியாதவர்கள் அதற்கான சரியான காரணத்தை தெரிவிப்பதன் மூலம் நியமனக்கடிதங்களை ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நியமனத்துக்குத் தெரிவானோரின் பெயர் விபரம் கல்வியியற் கல்லூரி ரீதியாக வருமாறு.

## யாழ்ப்பாணம்

### நூலகமும் தகவல் விஞ்ஞானமும

உஷாநந்தினி தர்மசேகரம் (மானிப்பாய்), மீரா லோகநாதன் (மானிப்பாய்), ஆன்மேரி டயனா ஹென ரி (பண்டத்தரிப்பு), லோறன்ஸ் விமலகாந்தன் (வேலணை), துளசி பாலசிங்கம் (உடுப்பிட்டி), வானதி புலேந்திரன் (கொக்குவில் கிழக்கு), பகீரதி நல்லநாதன் (சுன்னாகம்), காயத்திரி செல்வநாயகம் (சுன்னாகம்), துஷ்யந்தி கணபதிப்பிள்ளை (முல்லைத்தீவு), கண்முகரத்தினம் நிமலநேசன் (தாவடி).

### நடனம்

கிரிலோஜினி செல்வராஜா (கரவெட்டி), சங்கரப்பிள்ளை தர்சினி (சாவகச்சேரி).

### சங்கீதம்

சிவஞானம் ஞானரஞ்சன் (வல்வெட்டிதுறை), தனுஜா ஆறுமுகம் (அச்சுவேலி), அருளமொழி சிவகுரு (கரவெட்டி), கமலலோஜினி நவரத்னராஜா (கொடிகாமம்), அமபிகா நடராஜலிங்கம (புலோலி), ரஜினி இராஜநாயகம் (கரவெட்டி), சின்னையா கேதீஸ்வரி (முல்லைத்தீவு).

### கணிதம்

இராஜரத்தினம் தினேஷ் (யாழ்ப்பாணம்), நடராஜா சுதாகர் (பருத்தித்துறை), சுஜித்தா ஸ்கந்தராஜா (வட்டுக்கோட்டை), செல்வரஞ்ஜினி இளஞ்சிங்கம் (புலோலி), அபிராமி ராமநாதன் (கொக்குவில் மேற்கு), சிவாஜினி கனகரத்தினம் (உடுப்பிட்டி), சிவபுத்திரன் ஜெகதீபன் (கரவெட்டி), சோமசுந்தரம் கிருஷ்ணதாஸ் (மானிப்பாய்), சிதம்பரநாதன் அகிலன் (கொடிகாமம்), சிவபாதசுந்தரம்பிள்ளை நவநீதன் (பருத்தித்துறை), சமதர்மபாலன் சஜீவ்சிந்தூரி (அல்வாய்), சண்முகதாஸ் வாகீஸ்வரன் (திருநெல்வேலி வடக்கு), போஜன் உள்ளாசனன் (மானிப்பாய் மேற்கு), குணம் சசிதரன் (மீசாலை மேற்கு), தர்சினி தியாகராஜா (மல்லாகம்), ஜெயதர்சினி திருநாவுக்கரசு (சாவகச்சேரி), அம்பாலிகை சுவாமிநாதபிள்ளை (அளவெட்டி), மகாலிங்கம் யதீசன் (நீர்வேலி), நவராஜா பிரசாந்தன் (வட்டுக்கோட்டை), மரியதாஸ் தோமஸ் அசுபதிராஜ் (வவுனியா), குமாரசாமி உமாகரன் (தாவடி வடக்கு), தம்பிராஜா யுகேஸ் (மல்லாவி), வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (மாதகல்), சின்னத்துரை சிவகாந்தன் (சாவகச்சேரி), கமலநாதன் செந்தில்குமரன், (கரவெட்டி), தங்கராஜா ரவிதாஸ் (ஏழாலை), இரத்தினசிங்கம் சூரியகுமார் (செட்டிபாளயம்), வரதராஜன் பாலமுரளி (கொக்குவில் கிழக்கு).

### விஞ்ஞானம்

பரமசிவம் சிவசுதன் (மீசாலை), பத்மலோஜினி பத்மநாதன் (மிருசுவில்), கார்த்திகா சாம்பசிவம் (கொழும்புத்துறை), தியாகசொரூபவல்லிபுரம் (காரைநகர்), ராஜலோசனா ஓானந்தசிவம் (நீர்வேலி), தர்மிளா சிவராஜா (கரவெட்டி), ராதிகா இரத்தினம் (நீர்வேலி தெற்கு), தயாராணி சிவப்பிரகாசம் (முள்ளியவளை), குயிலினிசிறிகாந்தா (கரவெட்டி), நாகநந்தினி முத்தையா (வட்டுக்கோட்டை), வாசுகி இராசதுரை (சுன்னாகம்), செந்தில்நாதன் சனந்தன் (அளவெட்டி மேற்கு), இரத்தினம் சிவானந்தி (கிளிநொச்சி), பரமானந்தராஜா பார்த்தீபன் (சண்டிலிப்பாய்), தனரஞ்சிதநாதன் நித்தியா (யாழ்ப்பாணம்), தற்பரா தெய்வேந்திரம் (அச்சுவேலி), சுகந்தி வேலும்மயிலும் (பருத்தித்துறை), தியாகராஜா நர்மினி (பருத்தித்துறை), யாழினி ராஜகோபால் (யாழ்ப்பாணம்), தேன்மொழி ராஜேந்திரம் (ஏழாலை மேற்கு), சுரேஜினி பரஞ்சோதி (கோண்டாவில் மேற்கு), மதிவதனி நாகமுத்து (புத்தூர் கிழக்கு), சின்னராஜா சசிதரன் (துணுக்காய்).

### ஆரம்பக்கல்வி

சகுந்தலா சபாபதிப்பிள்ளை (வட்டுக்கோட்டை), தர்மினி வேலாயுதபிள்ளை (சாவகச்சேரி), கந்தசாமி ஹம்சன் (ஆனைக்கோட்டை), ஜோசல் ஜஸ்ரின் பேர்னாட் மரியசெல்வம் (ஆனைக்கோட்டை), பெனடிக் ராசநாயகம் அகிலநாயகம் (நாவாந்துறை), ஜெயரத்னசிங்கம் ஜெயஜீவன் (அளவெட்டி வடக்கு), ராதிகா கனகநாயகம் (மானிப்பாய்), ஜீவரேகா வரதராஜலிங்கம் (மானிப்பாய்), காஞ்சனா கந்தசாமி (தெல்லிப்பழை), விஜிகலா தர்மராஜா (மானிப்பாய்), விஜிதா திருநாவுக்கரசு (அச்சுவேலி), யசோதினி நாகரத்தினம் (நல்லூர்), வனராஜ் சிவராஜா (பண்டத்தரிப்பு), உமா கெங்காதரன் (கோண்டாவில் கிழக்கு), தர்சினி செல்வரத்னசிங்கம் (பொலிகண்டி), வெண்ணிலா பெர்னாண்டோ (வல்வெட்டித்துறை), வசந்தநாயகி முருகேசு (மிருசுவில்), ஜெயந்தினி தங்கராஜா (மீசாலை), சந்திரலேகா இராமச்சந்திரன் (அச்சுவேலி), கல்யாணி பாக்கியநாதன் (பருத்தித்துறை), சுவர்ணா தர்மலிங்கம் (யாழ்ப்பாணம்), தங்கராஜா நிமலன் (பருத்தித்துறை), பரமசாமி சந்திரமோகன் (மிருசுவில்), நடராஜா கலைமகள் (காரைநகர்), அனிற்விஜிதா அந்தோனிப்பிள்ளை (இளவாலை), கணேசமூர்த்தி தர்சினி (வல்வெட்டித்துறை), தர்மகுலசிங்கம் சுஜீவா (அல்வாய் கிழக்கு), சுந்தரலிங்கம் விஜிதா (கொடிகாமம்), கதிர்காமத்தம்பி சிவகுமார் (பருத்தித்துறை), தங்கராஜா ஜெயரதி (சுன்னாகம்), சிவலிங்கம் கலைச்செல்வி (புலோலி), தயாளினி தர்மகுலசிங்கம் (சாவகச்சேரி), சிவபாமா தங்கராஜா (மிருசுவில்).

## வவுனியா

### ஆரம்பக்கல்வி

கஸ்தூரி செல்வகிருஷ்ணன் (புலோலி), மைவிழி வல்லிபுரநாதன் (சாவகச்சேரி), நாகராணி வடிவேலு (புளியங்குளம்), கேதீஸ்வரி ராஜேந்திரம் (முள்ளியவளை), நடராசா சந்திரமோகன் (திருகோணமலை), சங்கரமூர்த்தி உதயநாதன் (மூதூர்), சிவநளாயினி நடராஜா (கிளிநொச்சி), அஜந்தன் கந்தசாமி (முள்ளியவளை), சிவராஜா யசோதரன் (ஒட்டிசுட்டான்), மாலினி, இராஜதுரை (மல்லாவி), வசந்தரூபி பரராஜசிங்கம் (விஸ்வமடு), மயில்வாகனம் சுரேஸ்தரன் (முள்ளியவளை), கோகிலராணி பாலசிங்கம் (புத்தூர்), சந்திரசேகரா அனுஷா (கொடிகாமம்), சத்தியபாமா சிவசங்கரி (முல்லைத்தீவு), ஹெலன் அமுதா துரைராஜா (சுனனாகம்), சத்தியரஞ்ஜினி நவரட்ணவேலு (பருத்தித்துறை), சியாமளா குணரத்தினம் (கோப்பாய்), தேவசிந்துஜா பேரின்பராஜா (அக்கரைப்பற்று), அருந்ததி குருநாதபிள்ளை (மட்டக்களப்பு), ஜதீஸ்வரா செல்வராஜா (கல்முனை), துளசிமலர் இளையதம்பி (மட்டக்களப்பு), அமிர்தாம்பிகை இராமச்சந்திரன் (முல்லைத்தீவு), ராசனி இராமலிங்கம் (திருகோணமலை), பாலரஜனி கனகரட்ணம் (திருகோணமலை), கந்தசாமி கிரிதரன், (மீசாலை), துஷியந்தினி, மகேஸ்வரன் (கிளிநொச்சி).

### உடற்கல்வி

யசோதா முருகேசு (மல்லாவி), புஷ்பகலா தியாகராஜா (கிளிநொச்சி), ராமேஸ்வரன் நாகமணி (மட்டக்களப்பு), ஆறுமுகம் காண்டீபன் (மட்டக்களப்பு), அன்ரனி பெலிஸ் ரஸ் பீற்றர்ஷா (மட்டக்களப்பு), முகமட் ஷரிவ் அப்துல் அஸீஸ் (கிண்ணியா-2), ஜவ்ர் அகரம் அகமட் (கிண்ணியா-5), அப்துல்லா முஸமில்லா (கிண்ணியா-6), முபாரக் முகமட் தசலிம் (கெந்தல), மடுதீன் குரூஸ் சவரியன் குரூஸ் (மன்னார்), ஜோான்னின்சன் பற்றிக் சந்தியாகோ (மன்னார்), அன்ரனி றெஜினோல்ட்பெரேரா (மன்னார்), வேலு திருச்செல்வம் (மட்டக்களப்பு), பாலசுப்பிரமணியம் விஜிதரன் (மட்டக்களப்பு), ஏரம்பமூர்த்தி கருணாநிதி (மட்டக்களப்பு), அப்துல் ஜலீட் முகமட் ஜனூஸ் (புத்தளம்), சிவப்பிரகாசம் வளசேகரம் (மட்டக்களப்பு).

### கிறிஸ்தவம்

சிந்துஜா பாக்கியநாதன் (கல்முனை-1), மேரி கிறிஸ்ரினா நெல்சன் (மட்டக்களப்பு), பெனார்ன்டோ காமிலன் பெல்ஷியா (மட்டக்களப்பு), டெனெற் சுவாம்பிள்ளை (முல்லைத்தீவு), அருட்சகோதரி விமலினி அல்பேட் (முருங்கன்), அருட்சகோதரி மரியம்மா சந்தியாப்பிள்ளை (வவுனியா), அருட்சகோதரி ஜெனிற்றா ரஜேல் (வவுனியா), அருட்சகோதரி துஷ்யந்தி செல்வநாயகம் (வவுனியா), மஞ்சுளா தங்கவடிவேலு (களுவாஞ்சிக்குடி), அலெக்ஸ் ஜோசெப் (முல்லைத்தீவு), சஹீலா அந்தோனிப்பிள்ளை (மாதகல்), அனன்சியற் அன்பரசி தேவதாஸன் (மன்னார்).

### மனைப்பொருளியில்

நிரிஜினி நித்தியானந்தம் (திருகோணமலை), தீபராணி செல்வராஜா (திருகோணமலை), பபிலா நேசரட்ணம் (வவுனியா), ரஞ்சினிதேவி ராஜமணி (வவுனியா), மெரினா நவஜோதி அரியநாயகம் (வவுனியா), ரஜிதாகரி கந்தசாமி (நீர்வேலி), சிவதர்ஷினி சின்னத்தம்பி (சாவகச்சேரி) சிவசாந்தினி சின்னத்தம்பி (சாவகச்சேரி), விநோதினி சந்திரசேகரம் (மிருசுவில்), தர்ஷினி ரட்ணசிங்கம் (சாவகச்சேரி).

### விவசாயம்

தஸ்லீமா சுலைமாலெப்பை (சம்பாந்துறை), ஜீவிதா ஜெரோட்சந்திரசேகரன் (காரைதீவு -5), விவேகானந்தராஜனி மடுப்போடி (அக்கரைப்பற்று-7), பிருந்தா ராஜதுரை (தம்பிலுவில் -2), கவிதா கந்தசாமி (கல்முனை), விஜயதர்சினி தங்கராஜா (மட்டக்களப்பு), இராமலிங்கம் மதன் (கல்முனை-2), பொன்னம்பலம் திலகராஜா (கல்முனை), ஆனந்தராசா திரவியராஜா (திருகோணமலை), இப்ராலெப்பை சஹீர் (இறக்காமம்-8), செல்வம் விஜயன் (மட்டக்களப்பு), செல்லையா சுதாகரன் (கல்லாறு), உதுமா லெப்பை ருவைஸ் (அக்கரைப்பற்று-1), வேல்நாயகம் கணநாதன் (களுவாஞ்சிக்குடி), வாசுகி பொன்னுச்சாமி (சாவகச்சேரி), சாமினி செல்வராஜா (சாவகச்சேரி) கிளிப்பிள்ளை பொன்னுத்துரை (களுவாஞ்சிக்குடி).

### இந்துசமயம்

மதிவதனி கிருஸ்ணபிள்ளை (மூதூர்), கஜந்தினி வேலுப்பிள்ளை (கிளிநொச்சி), நித்தியா நமசிவாயம் (கிளிநொச்சி), தில்லையம்பலம் சாந்தகுமார் (முல்லைத்தீவு), சுபாசினி முத்துக்குமார் (வவுனியா), மருதலிங்கம் பிரதீபன் (கொடிகாமம்), ஸ்ரீகுமாரி தர்மலிங்கம் (யாழ்ப்பாணம்), பிரபா கௌரிபாலன் (சுன்னாகம்), சந்திரகலா வேலுப்பிள்ளை (முல்லைத்தீவு), ராஜேஸ்வரி இராமநாதன் (வவுனியா).

## தேசியப் பாடசாலைகளில் நியமனம் பெறத் தகுதிபெற்றவர்கள்

## யாழ்ப்பாணம்

### ஆரம்பக்கல்வி

ம.மகேஸ்வரன் (இணுவில்), ப.வாசுகி (சுண்டுக்குளி), வி.ஞானரூபா (வண்ணார்பண்ணை), பா.துஷியா (யாழ்ப்பாணம்), த.தர்சிகா (கொடிகாமம்), க.சிவகாமி (கொழும்பு-6), இ.சிவராதிகா (சாவகச்சேரி), சி.சார்மினி (சுனனாகம்), கி.ஜெயரமணன் (மல்லாகம்).

### கணிதம்

செ.சஞ்சுளா (சித்தங்கேணி), டே.பகீரதன (வவுனியா), எஸ்.ஜெயதாரா (வவுனியா), ம.வாசவன் (அக்கரைப்பற்று), சு.விஜயதர்சன் (கல்முனை), க.நிமலன் (கரணவாய்), சோ.பரணிதரன் (கல்முனை).

### சங்கீதம்

யோ.புஸ்பலதா (சண்டிலிப்பாய்), கொ.தனுஷியா (நல்லூர்), சி.கோமதி (சுன்னாகம்), க.சித்ரா (மன்னார்).

### விஞ்ஞானம்

பி.செந்தில்குமரன் (கொழும்புத்துறை), சு.சுதர்சனா (சாவகச்சேரி), அ.அருட்செல்வி (சாவகச்சேரி), த.கௌரி (தெல்லிப்பழை), ச.அகிலன், (சாவகச்சேரி), க.கவிதினி (வவுனியா), செ.விஜயகுமார் (அம்பாறை), சு.சதீஸ்குமார் (மட்டக்களப்பு), வி.லாவண்யா (யாழபபாணம).

### ஆங்கிலம்

இ.பாமினி (கரவெட்டி), சீ.சுதர்சினி (திருநெல்வேலி). ந.கார்த்திகா (உடுப்பிட்டி),

### நூலக தகவல் விஞ்ஞானம்

சி.அம்பிகா (சுன்னாகம்), கா.ஹம்சலா (கல்லாறு), ச.ரேணுகா (கரவெட்டி).

### நடனம்

ரா.தபோதினி (மானிப்பாய்), சோ.ரேணுகாதேவி (வவுனியா), ஐ.யசோதினி (கலடடி), செ.ஹேமலதா (மட்டக்களப்பு).

### சித்திரம்

நே.மொ.யசீர்மியாத் (கிண்ணியா), அ.ஜெயதீபன் (மட்டக்களப்பு) கி.சுரேஸ் அல்வாய்.

## வவுனியா

### ஆரம்பக்கல்வி

கே.ஜெயமாலினி (திருகோணமலை), கே.வாசுகி (கிண்ணியா), என்.தர்ஷினி (வத்தேகம), பி.அனுஜா, (வாழைச்சேனை), என்.பரமேஸ்வரி (மன்னார்), இ.விஜயவதனி (வவுனியா), ஆர்.தவரஞ்சிதம் (வவுனியா), கே.சுகந்தினி (வவுனியா), ரி.பவானி (கொழும்பு -3), பி.பாலேஸ்வரி (வவுனியா), எஸ்.தர்மிலா (வவுனியா), எவ்.டொனானந்தஜோதி (மன்னார்), ஜி.அலையரசி (வவுனியா), எஸ்.சுபாஷினி (வவுனியா), ஏ.செல்வதேவி (வவுனியா), ஆர்.விஜிதா (வவுனியா), எஸ்.கௌசல்யா (வவுனியா), ஆர்.ரேணுகா (வவுனியா), கே.செல்வகுமார் (வவுனியா), ஏ.அருள்மொழி (கிளிநொச்சி), ஆர்.அமிர்தரமணி (பூநகரி), ஆர்.ஜெயப்பிரிஜா (வவுனியா), என்.கமலஜோதி (சுனணாகம்), கே.சுந்தரமோகன் (வல்வெட்டித்துறை), எஸ்.தேவகி (பருத்தித்துறை), வி.ரேணுகா (உடுப்பிட்டி), கே.திலகராணி (திருகோணமலை), பி.விமலரதி (திருகோணமலை), ரி.பிரசாந்தி (திருகோணமலை), எஸ்.உதயனன் (யாழ்ப்பாணம்), யு.புவிவதனி (மீசாலை), ரி.மாலதி (சுழிபுரம்).

### விவசாயம்

ஏ.எச்.பதுர்நிஷா (மருதமுனை), பி.சிவலோஜினி (களுவாஞ்சிக்குடி), பிரபாகரன் (களுதாவளை), ஐ.எல்.சஹீர் (இறக்காமம்-8), எம்.முகமட்மிஸ்பா (மருதமுனை-6), எம்.ஐ.இக்பால் (அட்டாளச்சேனை -12), கே.கவிதிலக (தம்பிலுவில்-2), என்.கோகுலநாதன் (மட்டக்களப்பு), எஸ்.நந்தகுமார் (மிருசுவில்), எம்.எச்.சித்தி (f)பஹிமா (காரைதீவு), யு.எல்-லா(f)பீர் (சம்பாந்துறை), ரி.தர்ஷனா (மட்டக்களப்பு), எம்.எம்.சித்திமுனாஷா (சம்பாந்துறை)

### உடற்கல்வி


கே.வசந்தமலர் (அம்பாறை), எம்.சுவீற்றாபிரியாளினி (மட்டக்களப்பு), சி.ஜெயஸ்ரீதேவி (வவுனியா), என்.பிரபாகரன் (மட்டக்களப்பு), எஸ்.முகமட் சுனஹல் (நரமல), எஸ்.ராஜபவன் (மட்டக்களப்பு) ஆர்.காண்டீபன் (வாழைச்சேனை), எஸ்.சிவரஞ்சிதமலர் (வரணி), எஸ்.சுகிர்தன் (சுன்னாகம்), ரி.தவச்செல்வம் (உடுப்பிட்டி), ஐ.சசிகுமார் (மானிப்பாய்), ஏ.முகமட் (ஏறாவூர்), எவ்.கமிலஸ் (மன்னார்).

### இந்துசமயம்

ஏ.கோகுலவாணி (வாழைச்சேனை), கே.கல்யாணி (வாழைச்சேனை), பி.சந்திரவதனி (வவுனியா), ரி.புஷ்பலதா (பொத்துவில்), என்.யாழினி (கல்லாறு), எஸ்.சுவர்ணா (திருகோணமலை), கே.கிருபாளினி (கிளிநொச்சி), எஸ்.வத்சலா, சாவகச்சேரி), ஏ.லிங்கேஸ்வரி (நல்லூர்), எஸ்.நரேஷ்குமார் (மட்டக்களப்பு), ஏ.பிருந்தாவன் (கொக்குவில்), எஸ்.சிவகரன் (வவுனியா), பி.லிங்கேஸ்வரன் (மட்டக்களப்பு), ஜி.தர்மினி (சுன்னாகம்), கே.மைதிலி (வரணி), எஸ்.சுசிர்தன் (சண்டிலிப்பாய்), எஸ்.ஜெயகாந்தன் (சுழிபுரம்).

(1..பக்கம் பார்க்க)

# தண்ணீர் ஆரோக்கியத்துக்கு



சிலர் ந...றயத் தண்ணீர் அருந்துவார்கள். அலுவலகத்திலும் கூட ஒரு தண்ணீர் நிறைந்த போத்தலை மேசையில் வைத்திருப்பார்கள். மேலும் சிலர் சாப்பிட்டுவிட்டு ஒரு கிளாஸ் தண்ணீர் அருந்துவதோடு சரி. வேறு நேரத்தில் தண்ணீரை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

ஒரு மனித உடம்பில் எழுபது சதவீதம் தண்ணீர்தான். இந்த அளவைத் தொடர்ந்து பேணிவரத் தினமும் குறைந்தபட்சம் மூன்று லீற்றர் தண்ணீராவது அருந்தவேண்டும். தண்ணீரைக் குறைவாக அருந்துபவர்களுக்குப் பல சிக்கல்கள் ஏற்படும். மூட்டுகளில் தண்ணீர் கட்டிவிடும். உடல் பருமன் குறையாது. கொழுப்பு வைத்துவிடும். தசை வளர்ச்சி நன்றாக அமையாது. சமிபாட்டு வேகம் குறைந்துவிடும். உணவு சக்தியாக மாறும் தொழில் மெதுவாகவே நடைபெறும். உடலில் நச்சுப்பொருட்கள் தங்கும். உடல் அவயங்களின் இயக்கம் முறையாக நடக்காது.

குறைவாகத் தண்ணீர் குடிக்கும்போது தண்ணீரை வெளிவிடாது உடல் தன்னிடத்தில் தண்ணீரைத் தக்கவைத்துக்கொள்ள முயற்சிப்பதன் விளைவாகவே மூட்டுகளில் நீர் கட்டிவிடுகிறது. உடல் இயக்கத்துக்குத் தண்ணீர் மிக அவசியம்.

மூச்சுவிடுவதன் மூலம் மட்டும் தினசரி அரைபோத்தல் தண்ணீர் வெளியேறுகிறது. சிறுநீரகம் யுரியாவையும் யுரிக் அசிட்டையும் வெளியேற்றுவதற்கு நிறையத் தண்ணீர் தேவை.

இல்லையேல் சிறுநீரகத்தினால் கழிவுகளை வெளியேற்றுவதில் தாமதம் ஏற்பட்டு வேறு தொல்லைகளை எதிர்நோக்கவேண்டிவரும். சிறுநீரகத்தில் கற்கள் உருவாகும். உணவு சக்தியாக மாறுவதற்கும் சமிபாட்டின்போது இரசாயன மாற்றங்கள் ஏற்படுவதற்கும் தண்ணீர் மிகவும் அவசியம்.

உடலைக் குளிர்ச்சியாகப்

## எளிய வழி

பேணுவதற்கும், மூட்டுகளைச் சுலபமாக இயங்கச்செய்யவும், பிராணவாயுவை உடலெங்கும் எடுத்துச் செல்லவும் தண்ணீர் அவசியம். நமது நுரையீரல்கள் எப்போதும் ஈரலிப்பானதாக இருக்கவேண்டும். பிராணவாயுவை உள்ளிழுக்கவும் கரியமிலவாயுவை வெளியேற்றவும் தண்ணீர் இன்றியமையாதது.

நிறையத் தண்ணீர் அருந்துபவர்களின் உடல் கண்டபடி சதை போடாது. அதிக தண்ணீர் அருந் ம் போது அடிக்கடி பாத்ரூம் போக வேணடி வருமோ எனச் சிலருக்குச் சந்தேகம் வரலாம். ஆரம்பத்தில் அப்படித்தான். பின்னர் சிறுநீரகம் தன்னை ஒழுங்கமைத்துக்கொண்டதும் அடிக்கடி சிறுநீர் பிரியாது.

இந்த அறிவுரையும் விளககங்களும் தண்ணீரைக் கண்டால் முகம் சுளிப்பவர்களுக்காக. ஆனால் தண்ணீர் குடிக்கிறேன் என்று குளிர் பானங்களை இவர்கள் நாடக்கூடாது. இளநீர் விதிவிலக்கு.

ஆனாலும் சுத்தமான நீரைத் தினசரி அடிப்படையில் அடிக்கடி அருந்துவதே ஆரோக்கிய வாழ்க்கைக்கான ஒரே எளிய வழி!

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 48

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'இளையதிலக' நடிகரான இவர், தற்போது ஸ்ரார் நடிகருடன் ஒரு படத்தில் இணைநதுள்ளார். இவரை உங்களுக்குத தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும 21 ஆம் திகதிககு முனனர் கிடைககக் கூடியதாக அனுபபிவைக்கவும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 48**
**வலம்புரி ~ சங்குநாதம**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**

**குறிப்பு:-**


சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளாகளுககு குலுககலமுறை மூலம தெரிவுசெய்யபபடடு பரிசு வழஙகப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணததினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக் கொள்ளவும.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-48

| | |
|---|---|
| படத்தில் உள்ளவரின் பெயர் | :-...................... |
| அனுப்புபவரின் முழுப்பெயர் | :-...................... |
| அனுப்புபவரின் முகவரி | :-...................... |
| | ...................... |
| | ...................... |

### இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 46 சரியான விடை





**நடிகர் வடிவேலு**

### இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 46இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம

| | |
|---|---|
| முதற் பரிசு | :~ப.ராசரத்தினம், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். |
| இரணடாம் பரிசு | :~த.கலாயினி, கூழாவடி, ஆனைக்கோட்டை. |
| மூன்றாம் பரிசு | :~திரு.இ.மதிவதனி, மாவடி, வட்டுக்கோட்டை. |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

V.C.சோதிநாதன், பண்ணாகம். சி.குருபரன், வதிரி. மு.பிறேமினி, மானிப்பாய். பொன்.குணரத்தினம், குருநகர். அ.றஜீதீபன், நல்லூர். திருமதி. P.S.ராணி, சங்கானை. சி.விவேக், வியாபாரி மூலை. திருமதி. பா.தவமணி, பருத்தித்துறை. இ.வாசவன், கல்வியங்காடு. திருமதி.ஜெ.கணேசன், மூளாய். ந.பரமேஸ்வரன், சாவகச்சேரி. K.டக்லஸ்ரூபன், குருநகர். இ.வசந்தினி, ஏழாலை. ம.தனுராஜ், அரியாலை. சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். K.கனக சபாபதி, தம்பசிட்டி. லோ.நடராசா, உரும்பிராய். சி.பிறேம்குமார், கந்தர்மடம். க.பவானி, அரியாலை. கே.அரசேஸ்வரன், நல்லூர். செ.நித்தியவாணி, இருபாலை. சு.துசிதா, அல்வாய். வே.குமார சுவாமி, கரவெட்டி. ம.தர்ஜியா, கரவெட்டி. சூ.யோ.மரியடாசன், அளவெட்டி. K.T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. அ.உதயசிறி, ஆனைக்கோட்டை. ம.தருணி, யாழ்ப்பாணம். வ.ராதிகா, சாவகச்சேரி. சு.மதுசன், சண்டிலிப்பாய். ம.மைதிலி, கோண்டாவில். செ.சிந்துஷன், நீர்வேலி. க.மனோகரன், நாவற்குழி. S.நித்தியா, கொக்குவில். அ.அனித்தா, வடலியூர். லோ.அபிராமி, பருத்தித் துறை. V.இளங்கோ, கோப்பாய. வ.மயில்வாகனம், அளவெட்டி. த.தர்மரத்தினம், கல்வியங்காடு. ம.மயிலினி, சாவகச்சேரி. த.சாளினி, அராலி. சி.தங்கராணி, கருங்காலி.

# ஐயங்கள் ஆயிரம்

## மண்பானை மகத்துவம்

மண்பானையில் ஊற்றிவைக்கப்பட்ட நீர் குளிர்ச்சியாக இருக்கிறது. அதே பானையில் சில காலம் கழித்துத் தண்ணீரைக் குளிர்விக்க முடிவதில்லை. இதற்குக் காரணம் என்ன? மண் பானைக்கும், ஸ்டீல் பானைக்கும் உள்ள முக்கிய வேறுபாடு, முன்னதில் கோடிக்கணக்கான ஓட்டைகள் இருப்பதுதான். பானையை உடைத்து அதன் ஓட்டை உடைந்த விளிம்பில் பார்த்தால் சிலந்தி வலை நூலிலும் மெல்லிய கால்வாய்கள் இருப்பது தெரியும்.

பானை மண்ணால் செய்யப்பட்டதனால் மண் துகளின் இடுக்குகள் இடையேயுள்ள இடங்கள் இந்த நுண் துவாரங்களை உருவாக்குகின்றன. பானையில் ஊற்றிய நீர் இந்த நுண் துவாரங்கள் வழியாக வெளியே கசிக்கின்றது. கசிந்த நீர் காற்றில் காய்ந்து ஆவியாகும்போது, அதற்குத் தேவையான சூட்டை உள்ளிருக்கும் நீரிலிருந்தே எடுத்துக்கொள்வதால், வெளியே நீர் கசிந்து ஆவியாக உள்ளே நீர் குளிர்ந்துபோகிறது.

குடிநீரில் இயல்பாகவே நிறையக் கிருமிகள் இருப்பதால் அவை உள்ளே மெல்லிய பசை போன்ற படலத்தை ஏற்படுத்திவிடுகின்றன.. பானையைத் தேய்த்துக் கழுவினாலும் இந்தப் படலம் கெட்டியாக ஒட்டிக்கொண்டு பானையின் புலப்படாத துகளை அடைத்துவிடுகின்றன. அதன்பிறகு நீர் குளிர்வது குறைந்துபோகிறது.

# நாய்கள் நாக்கை வெளியே தொங்கப் போட்டுக் கொள்வது ஏன்?



நாய்கள் பாலூட்டி இனத்தைச் சார்ந்தது. பொதுவாகப் பாலூட்டிகள் தம் உடல் வெப்பநிலையை ஒரே சீராக வைத்துக்கொள்ளக்கூடிய தகவமைப்பைப் பெற்றவையாகும்.

பொதுவாக நாய்கள் கோடைகாலத்தில் நாக்கை வெளியே தொங்கப் போட்டுக்கொண்டு மூச்சிரைக்க ஓடும். இதற்குக் காரணம் என்னவென்றால், நாய்களுக்கு வியர்வைச் சுரப்பிகள் உடல் தோல் பகுதியில் கிடையாது. பாதத்தில்தான் உள்ளன. அதுவும் மிகக்குறைவானது. ஆகையால் உடல் வெப்பத்தை ஒரே சீராக வைத்துக்கொள்வதற்கு நாக்கின் வழியாகவும், வாய்க் குழியிலிருந்து நீர் வெளியேறி சுவாசப்பை பாதையை ஈரமாக வைத்துக்கொள்ளும். சாதாரண காலங்களில் நாயானது ஒரு நிமிடத்துக்கு 15-30 தடவை சுவாசிக்கும். ஆனால் வெப்பகாலத்தில் ஒரு நிமிடத்துக்கு சுமார் 300 தடவை சுவாசச் சுழற்சி நடைபெறும்.

# கடல் தந்த வாழ்வியல்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

## 1. நிலவகை

தமிழர் வாழ்வியலில் கடல் கொண்டுள்ள தொடர்பு, மிக அளப்பரியது. பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை கடல்தந்த வாழ்வியல் பற்றி மீள நோக்குவது பயனுடைத்து. அண்மையில் நடைபெற்ற இயற்கைப் பேரழிவு இவ் எண்ணத்தை மேலும் வலுப்பெறச் செய்துள்ளது எமது பண்டைத்தமிழ் இலக்கியங்கள் அந்த வாழ்வியலைப்பற்றி பதிவுகள் செய்துள்ளன. சங்க இலக்கியங்கள் தொடக்கம் இன்றைய குறுங் கவிதைவரை இப் பதிவுகள் பரவிக் கிடக்கின்றன. தொல்காப்பியம் எனும் பழந்தமிழ் இலக்கணம் கடல் தந்த வாழ்வியல் பற்றி நோக்குவதற்கு சில தரவுகளையும் தந்துள்ளது. எனவே அவற்றை எல்லாம் எடுத்து எல்லோர் உள்ளத்திலும் ஒரு மீள் பதிவைச் செய்து எங்கள் உயிராம் தமிழ் மொழியின் பேராற்றலை எல்லோரும் உணரவைப்பது இன்றைய பணியாகும்.

கடலால் சூழப்பட்ட நிலவுலகத்தை அதன் இயற்கை வள நிலைக்கேற்பத் தொகுத்துக் காட்டுகிறது. தொல்காப்பியம்.

**''மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே''**

(தொல:பொருள்:அகத்:5)

திருமாலின் காவலைக் கொண்ட காடு, முருகவேலின் காவலைக் கொண்ட உயர்ந்த மலை, இந்திரனின் காவலைக்கொண்ட நன்னீர் பொருந்திய வயல், வருணனைக் காவலாகக்கொண்ட மிகுந்த மணல் பொருந்திய கடல்சார் நிலம், என நிலத்தியல்பைக் கூறி அவற்றை முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என மரபாக அழைக்கப்பட்ட முறைமையையும் தொல்காப்பியம் விளக்கமாகப் பதிவு செய்துள்ளது.

இத்தகைய பாகுபாடு நிலங்களில் இயல்பான தன்மைகளையும் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியலையும் நன்கு விளங்கிக்கொள்வதற்கு உறுதுணையாக உள்ளது. இந்நூல் வகை நிலங்களில் குறிஞ்சியும் முல்லையும் வேனிலின் வெம்மையால் தம் இயல்பு நிலை மாற்றமடைந்து பாலை நிலம் உண்டாகும். என விளக்கப்பட்டுள்ளது. இச் செய்தியினை சிலப்பதிகாரம் பதிவுசெய்துள்ளது. இந்த விளக்கம் நிலங்களை ஐந்தாக வகுத்துள்ளது. மக்கள் குடியிருப்புகள் நான்கு நிலங்களில் சிறப்பாக அமைந்திருந்தன. ஆனால் முல்லை நிலத்திலும் குறிஞ்சி நிலத்திலும் இயற்கை வளங்கள் குறைந்த போது அவை வரண்ட நிலங்களாக மக்கள் குடியிருப்புக்கு ஒவ்வாத நிலங்களாக மாறின. அதுவே பாலைநிலம் என அழைக்கப்பட்டது.

**"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்கு துயருறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்...''**

(சிலம்பு:11:64-67)

எனச் சிலப்பதிகாரம் விளக்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2. உணவு

செந்தமிழ்ச் சொல் ஓவியங்களான சங்கத்தமிழ் செய்யுட்கள் சில வரையறைகளைக் கொண்டமைந்தவை பாடு பொருளை மக்கள் பேணிய மரபு பிறழாமல செய்யுள ஓவியங்களாக அமைந்துள்ளன. இயற்கையோடு இயைபு பட்டிருந்த மக்கள் வாழ்வியலை பல வகைக் கோலங்களாக சொற் சித்திரங்களாக உருப்படுத்தி தமிழ் மொழியால் உயிரூட்டி உள்ளனர். காட்சிப் பொருளையும் கருத்துப் பொருளையும் இரு பெரும் பிரிவாக நோக்குதல் வழக்கு காட்சிப் பொருள் ஐம்பொறிகளால் உணரப் படுவது கருத்துப்பொருள் உள்ளத்தால் உணரப்படுவது மக்கள் வாழ்வியல் வேறுபட்ட நிலையை, உலகியலோடு எடுத்துக் காட்சிப்படுத்தும் புலவரது செந்தமிழ்ப் புலமை என்னும் ஊற்று அதனைப் படிப்பவர் உள்ளங்களில் உயிர் மூச்சாகப் பரக்கும் தன்மையது.

இந்த உயிர மூச்சு காற்றோடு கலந்து ஐவகை நிலங்களிடையே தவழ்ந்து நின்றது. நிலத்து வாழ்ந்த மக்களின் வாழ்வியல், அந்த நிலத்தின் இயற்கைச் சூழலோடு இறுகப்பிணைந்து இருந்தது. நிலத்து விலங்கு, மரம், பறவை, செடி கொடி புல்லினம் என எல்லாமே வாழ்வியலோடு இணைந்திருந்ததை இந்த மூச்சுக்காற்றே எம்முள் நுழைந்து சொல்லுகிறது. தமிழ் மொழியின் உயிராம் தன்மையை உணர அந்தந்த நிலத்துவாழ் மக்களின் உணர்வை அறிய இதுவே ஆற்றுப்படுத்துகிறது. அதே கடல் தந்த வாழ்வியல் கண்ணில் தெரிகிறது.

கடல் சார்ந்த நிலத்திலேயே ஒரு குடியிருப்பு அதனைச் சங்கப் புலவர் சொல் ஓவியமாக வரைந்து வைத்துள்ளார். புலவரின செந்தமிழ்த் திறம் பாடலாக உருவெடுத்து நின்றது. அதனுள் பொதிந்திருக்கும் உண்வு நிலையை நாம் உணர உயர்ததமிழ்தான் வழிகாட்டுகிறது. பெருங் கடற்பரப்பு சிவந்த இறால், மீன்கள் எல்லாம் அஞ்சி நடுங்கி ஓடுகின்றன. மீன்களை வலை வீசிப்பிடிக்கும் தொழிலை மேற் கொண்ட ஒரு குடும்பத் தலைவனின் பார்வையில் இருந்து அந்த மீன்கள் தப்புவதற்கு எடுக்கும் முயற்சி ஆனால் அது கைகூட வில்லை.

மீன் வேட்டையை நிறைவு செய்து நீண்ட படகில் இருந்து இறங்குகிறான் தந்தை.! மகள் இளையவள்! ஆனால் உப்பு வாணிகம் செய்வதில் திறமை பெற்றவள்.

அங்கு உப்பை விற்றுப் பெற்ற நெல்லினை அரிசியாக்கி வெண்சோறாக்கினால். அயிரை மீனைப் போட்டு ஆக்கிய சுவையான புளிக்குழம்பு அத்தோடு கொழுத்த மீன் கருவாட்டுப் பொரியல், தந்தைக்கு அவள் பரிமாறி உண்ணக்கொடுக்கிறாள். நல்ல நிறைவான உணவு கடல் தந்த விளை பொருளால் மகிழ்வான வாழ்வு நடக்கிறது. உப்பும் மீனும் கடல் வேளாண்மையால் பெற்ற விளைச்சல் பண்டமாற்று நிலையில் மருத நில வேளாண்மையால் பெற்ற நெல் இரண்டும் உணவுப் பழக்கத்தை காட்டும் நிலை சங்கப் பாடல் உயிரோட்டமாக அமைய சொல்துணை செய்யக் கருத்தை நிறைக்கும். செய்யுள் வரிகளில் விழிகள் மேய்கின்றன.

**" பெருங்கடற்பரப்பில் செயிறா நடுங்க**
**கொடுந்தொழில் முகந்த செங்கோல் அவ்வலை**
**நெடுந்திமில் தொழிலோடு வைகிய தந்தைக்கு**
**உப்பு நொடை நெல்லின் மூரல் வெண்சோறு**
**அயிலை துளந்த அம்புளிச் சொரிந்து**
**கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்...''**

(அகம்:60:1-6)

## 3 உடை

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவதற்கு அந்நிலத்துப்பூவே காரணம். நெய்தல் என்பது கடற்கரையில் கடலும் ஒரு நீர்க்கொடி இலைக்கு மேலாக நீண்டு வளரும் மலரை உடையது நெய்தல் பூவை நாரை உண்ணும் நெய்தல் பூவின் காம்பு திரண்டிருப்பதால் 'கனைக்கால் நெய்தல்' என்றும் அழைக்கப்படும். மலரின் நறுமணமும் தேனும் சுரும்புகளை அழைக்கும் இந்த இனிய கண்ணைக் கவரும் கவின்தான் நெய்தல் நிலத்தின் உயிரோட்டமான நிலையாகும். இளமையின் செயற்பாடுகளுக்கு நெய்தல் சிறந்த களமாக அமைந்திருந்தது. புலவரின் நோக்கில் பட்டது. காட்சியாய் விரிந்தது.

கானற் சோலையில் நிலவு மணலில் இளம் பெண்கள் வாழ்வு இன்பமாய்க் கழியும். மணல் மேட்டிலேயே செழித்து நிற்கும் புன்னை மரத்தின் குளிர்மையான நிழலிலேயே தங்கியிருப்போர் ஒருபுறம் தந்தையர் கொணர்ந்த கொழுத்த மீனின் வற்றலைக் கவர்ந்து உண்பதற்கென கூட்டமாய் வரும் பறவைகள் அவற்றை விரட்டும் இளங்குமரிகள் சிலர் சிவந்த நண்டின் ஆழமான வலைகளில் தோண்டுகிறார்கள்.

புலிநகக் கொன்றையின் உயர்ந்த கிளையிலேயே கயிற்றினால் கட்டிய ஊசலில் அமர்ந்து ஆடும் பெண்கள் உள்ளத்திலே கடற்கரையை ஆளும் பெருமிதம் பிடிகொண்டுள்ளது. சிலர் காற்றக்கொணர்ந்து குவித்த வெண் மணலிலேயே ஆயாத்தாருடன் குரவை ஆடுகின்றனர். விளையாட்டு அலுத்துப் போய்விட்டால் எல்லோருமாகச்சென்று வெண்மையான நுரைபடர்ந்த கடலிலே இறங்கி நீராடுவார்கள். அவர்களது நெஞ்சிலே நீரைப்பற்றிய பயம் இல்லை. நீராட்டம் முடிந்த பின் அவர்கள் அணியும் ஆடை! அது ஒரு தனித்துவமான கைவினையாக்கம்.

அழகிய பூக்களுடன் பசுமையான தழைகளையும் தொடுத்த தழையாடை, ஆடை அணிந்த பின்பும் காணற் பூக்களையும் சூடி அழகுக்கு அழகுசெய்யும் வண்ணக்கோலம். அது ஆடவரை ஈர்க்கும் கவிங்கோலம். நெய்தல் நிலத்து இயற்கை அழகுடன் இந்த வண்ண மகளிரும் இணையும் சொற் சித்திரம் உணவு நிலையுடன் உடைபற்றிய கருத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

"மதுரைத் தமிழ்க்கூத்தனார்' எனும் புலவர் காட்டும் கடற்கரை அது. எம்மையெல்லாம் அழைக்கும் இனிய கூத்தரங்கம்.

**''பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்.**
**கானல் அம்பெருந்துறைக் கவினி மாநீர்ப்**
**பாசடைக்கழித்த கனைக் கால் நெய்தல்**
**விழவு அணி மகளிர் தழை அணிக்கூட்டும்''**

(அகம்:70:9-12)

சித்திரம் எழுதினால் போல மலர் உதிர்ந்து கிடக்கும் அழகு எமது மனக் கண்ணில் தெரியும் போது தமிழ் மூச்சாய் வருகிறது. இன்பமான கடற்கரையில் இன்றுவரை மடியில் தவழும் மக்களை மகிழ்வித்துக்கொண்டிருக்கிறது. இயற்கையின் கொடை இதுவென உணர்ந்த எம் முன்னோர் தமிழ் மொழியின் வாழும் நிலை உணர்ந்தவர்.

அதனால் கவிதையிலே காணற் சோலையை வரைந்துள்ளனர். கடல் அன்னையின் மடியில் தவழும் குழந்தைகளாய் மக்கள் வாழ்வு நடந்ததை இக் கவினூட்டிய சித்திரங்கள் விளக்கி நிற்கின்றன.

## 4 காதல்

இந்தக் கடற் கானச் சோலையிலேயே காதல் புகுந்தது. அந்தக் கதை கூறுகிறாள் ஒருத்தி. நெருங்கிய நட்புடைய தோழியர் குழாத்துடன் கடலிலே சேர்ந்து விளையாடியும் சிற்றில் இழைத்தும் இருந்த வேளையிலேயே சிறு சோறு ஆக்கிய களைப்பில் நாம் இளைப்பாறி இருந்த போது ஒருவன் வந்தான்.

**"தடமென் பணைத்தோள் மடநல்வீரே**
**எல்லும் எல்லின்ற அசைவு மிகவுடையேன்**
**மெல் இவைப் பரப்பின் விருந்து உண்டு யானும் இக்**
**கல்வென் சிறுகுடி தங்கின் மற்று எவனோ...''**

(அகம் 110:10-13)

எனக்கேட்டான் நாம் இவை நுமக்கு உரியன அல்ல. இது இழிந்த கொழுமீனால் ஆகிய உணவு என நாகரிகமாய் உரைத்தோம். ஆனால் அவனோ நீண்ட கொடிகள் அசைந்து பறக்கும் நாவாய்கள் தோன்றுகின்றன. அவற்றைக் காண்போமா, என்று கூறி எம் சிற்றிலைக் காலால் சிதைத்துவிட்டு ஓடிப்போனான்.

போகும்போது ஒருத்தியைக் குறிப்பாகப் பார்த்துச் சென்றான். போனவன் தன் தேரின் கொடிஞ்சியைப் பற்றியபடி ஒருகணம் நின்றான் அந்தக்காட்சி இன்னும் என் கண்ணுள் நிற்கிறது. இளம் பெண்ணின் கண்வழி சென்ற காதல் நிலையைப் புலவர் எப்படி அறிந்தாரோ தெரியவில்லை. நேரிற் கண்டது போல் பாடியுள்ளார். இடையே ஒரு இன்றியமையாத செய்தியையும் இணைத்துள்ளார்.அது இன்று நாம் தேடும் செய்தி.

நெய்தல் நிலத்திலே வாழ்பவருக்கு வலைவளம் தப்புமானால் அவ்வூர் மகளிர் அனைவரும் சேர்ந்து குழியிலே சுறவுக்கோடு நட்டுப் பரவுக்கடன் செயவர். கொடுஞ்சுழிகள் மேவிய புகாரிலுள்ள தெய்வத்தை நோக்கி 'கொடிய சூள் உரைக்கும் வழிபாடு நடைபெற்றது. மனித ஆற்றலுக்கு மேலான உயர் சக்தியிடம் எதையும் வேண்டிப் பரவும் முறைமையிலிருந்து. மனித விழுமியங்களில் ஒழுக்கம் உயிரிலும் மேம்பட்டது. அதனால் கொடுஞ்சுழிக்கு மடை பரவும் வழிபாட்டு நடைமுறை தோன்றியது.

இயற்கையால் மனிதவாழ்வியல் இடர்படும்போது அதைத் தாங்கும் வலியை அந்தந்த நிலத்துத் தெய்வத்திடம் வேண்டிப் பெற்றனர். அகநானூறு இந்த நடைமுறையை எடுத்து இயம்பியுள்ளது. காதல் உணர்வைப் பாடும் புலவர் மனித உள்ளத்தின் மாறாத சோகத்தை நீக்கவும் வழி சொல்லிப் போயுள்ளார். போந்தைப் பசவையார் என்னும் புலவர் இதனை உயிரோட்டமாக வைத்துள்ளார். மனிதருக்குப் பயப்படாமல் தெய்வத்திற்கு மட்டுமே பணியும் பெண்மையின் குண நலன் இங்கே கூறப்படுகிறது.

**''அன்னை அறியினும் அறிக அலர்வாய்**
**அம்மென் சேரி கேட்பினும் கேட்க**
**பிறிது ஒன்று இன்மை அறியக்கூறி'**
**கொடுஞ்சுழிப் புகார்த் தெய்வம் நோக்கி**
**கடுஞ்சூமார் தருகுவன் நினக்கே...'**

(அகம்:110:1-4)

இங்கே இன்று நாம் பேசும் ''சுனாமி'' என்ற சொல்லின் தமிழ்ச்சொல் 'கொடுஞ்சுழி' என்பது பெறப்படுகிறது. இது எமது மொழியின் பதிவாகும்.

## 5 வழிபாடு

கடற்கரை நிலத்துக்குரிய தெய்வம் வருணன் எனத் தொல்காப்பியம் விளக்கியுள்ளது. 'கொடுஞ்சுழிப்புகார்த் தெய்வம்' எனச் சங்கத்தமிழ் பேசுகிறது. கடலின் இயல்புநிலைக்கு மாறான தன்மை ஒன்று இருப்பது உணரப்பட்ட போது மனிதன் அதைப்பணிந்து வழிபடும் மனப் பக்குவத்தைப் பெற்றன. இலக்கியம் கூறும் வாழ்வை இலக்கண வரையறையுள் அமைக்கும் முயற்சி மேற் கொள்ளப்பட்ட போது இத்தகைய உயிர்நிலையான மரபுகள் பேணப்பட்டன. அவையே பிற்காலத்தவர்க்கு வழிகாட்டி, வாழ்வியலைச் சீர் செய்யப் பெரிதும் உதவின.

ஆணும் பெண்ணுமாய்க் கருத்தொருமித்து அன்புடன் வாழும் குடும்பவாழ்வின் அடித்தளமாக அசையாத நம்பிக்கையாக வழிபாடு அமைந்திருந்தது அது அன்புநெறியில் யாவரையும் ஆற்றுப்படுத்தியது.

கண்ணுக்குப் புலப்படாத கருத்தினால் அறிய முடியாத இயற்கையின பேராற்றலை மனிதன் பணிந்து வாழும் மனப் பக்குவம் பெற்ற போது அவன் செயற்பாடுகளின் சீர்மை சேர்ந்தது. ஒழுங்கான செயற்பாடுகள் நன்மையைத் தந்தன. அதனால் மனிதனுக்கு ஒழுக்கம் தேவையென்ற கருத்து உறுதி செய்யப்பட்டது. அது உயிரினும் மேலாக ஓம்பப்பட்டது. ஒழுக்கம் மீறலுக்கான முயற்சிகள் நடைபெற்றபோது வழிபாட்டுநெறி நினைவுபடுத்தப் பட்டது.

ஆண்களால் ஒழுக்கம் பேணப்படாதபோது பெண்கள் வழிபாட்டின் மூலம் அதைச் சீர்செய்தனா. அகவாழ்வு பிறழும்போது பெண்மையே அவலம் அடைகின்றது. ஒழுக்கம் கெட்டு உலகில் வாழமுடியாதநிலை. அதனை விரும்பாது தன்னையே நொந்து கொள்ளும் பெண் கடற்கன்னியாக தன்னை எண்ணுகிறாள்.

**''தண்ணரும் பைந்தார் துயல் வர அந்திக்**
**கடல்கெழு செல்வி கரை நின்றாங்கு**
**நீயே கானல் ஒழிய யானே**
**வெறிகொள் பாவையிற் பொலிந்த என் அணி துறந்து**
**ஆடுமகள் போலப் பெயர்தல்**
**ஆற்றேன்...''**

(அகம்:370:11-15)

கானலில் வந்து கண்டு போகம் ஆண்மகன் திருமணம் பற்றிய எண்ணமின்றி இருக்கிறான். நெருங்கிய நட்பு கேண்மையாகி உயிரோடு கலந்த நிலை. பெண்ணில் நிலை அவலமாகிவிட்டது. இல்லம் திரும்பிச்சென்றால் தந்தையின் காவலுக்குட்பட நேரிடும் எனவே தான் போகாமல் அவளோடு இணைய நினைக்கும் பெண்மை தவிக்கிறது. பிரிந்து போனால் உயிர்வாழ மாட்டேன் என்று உறுதியாக நிற்கிறது.

அதனால் அந்திப் பொழுதிலே கடற்கன்னி கரையிலே வந்து நிற்பது போல நிற்கிறான். அவளுடன் வந்த தோழியோ இல்லம் திரும்ப முடியாதநிலை எனவே வெறியாடல் செய்த ஆடுமகள் அழகு துறந்து மீண்டும் செல்லுவது போல நான் போக முடியாது எனக் கூறுகிறான். உயிர்வாழ்க்கை பற்றித் தன் தோழி கவலைப்படும் வேளையில் உடன் நின்று ஆற்றும் உயர்நட்பு இது அதைப் பேசும் புலவர் பாடலுள் பொதிந்த வழிபாடு பற்றிய செய்தி இன்றைய வாழ்க்கைக்கும் வழி காட்டுகிறது. பண்டுதொட்டு இன்றுவரை உயிர்க்கு உறுதியாய் நிற்கும் தெய்வ நம்பிக்கையைத் தமிழ் ஊட்டும்போது 'தமிழ் எங்கள் உயிர்' என்பதும் உணரப்படுகிறது. அதுவே இன்றைய அவலத்திலிருந்து நாம் மீள்வதற்கும் எம்மை ஆற்றுப்படுத்துகின்றது. ''கொடுஞ்சூழி'' தந்த துயர்தீர தமிழ் ஆவணப்படுத்தியுள்ள நடைமுறைகளை மீண்டும் நாடுவதே சாலவும் சிறந்தது. □

# ஆரோக்கிய வாழ்விற்கு ஆயுர்வேதம்

## மருத்துவ விளக்கம்

## அதைக் கைக்கொண்டால் இராஜபோகம்

மனிதன் ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்கு வழிகாட்டுவது ஆயுர்வேதம். மனிதன் நோயுற்ற காலத்தில் அதனை இலகுவான முறையிலும் எளிதான முறையிலும் தீர்ப்பதற்கு வழிகாட்டுவதும் ஆயுர்வேதமே. ஆயுர்வேதம் இயற்கைதந்த வரப்பிரசாதம் ஆகும்.

ஆயுர்வேதம் சிவபெருமானால் சித்தர்களுக்கு உபதேசிக்கப்பட்ட வேதம். சிவபெருமானுக்கு வைத்தியநாதர் என்றும் ஒரு பெயருண்டு.

மனிதன் சுகமாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கு சுவாசம், உணவு, இருப்பிடம், சூழல் முதலியன சிறந்த முறையில் அமைய வேண்டும்.

இயற்கை தரும் உணவுகள் தாவர உணவு, மாமிச உணவு என இருவகைப்படும். இதில் தாவர உணவில், உணவாகப் பயன்படும் தாவரங்கள், மருந்தாகப் பயன்படும் தாவரங்கள் எனப் பிரிக்கலாம். மருந்தாகப் பயன்படும் தாவரங்கள் மூலிகைகள் எனப்படும். தாவர உணவே மனிதனுக்குக் குளிர்ச்சியையும் வளர்ச்சியையும் அளிக்கின்றது. உஷ்ண வலயமான எமது நாட்டில் சூடான உணவுகள் எமது தேகத்திற்கு உகந்ததல்ல.

சுகத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழவிரும்பும் ஒவ்வொரு மனிதனும் இயற்கை தரும் தாவர, மூலிகைபற்றிய அறிவை முழுமையாக அறிந்திருத்தல் அவசியம். மூலிகைகளின் பயனபாடு பற்றிய விரிவான விளக்கம் ஒவ்வொரு பாடசாலைகளிலும் மாணவர்களுககுக் கற்பிக்கப்பட வேண்டிய பாடமாக அமைதல் வரவேற்கத் தக்கது. ஏனெனில் ஒரு செயலை நடைமுறைப் படுத்தும் திறன் மாணவருக்குத் தான் உண்டு.

தாவர உணவில் தானிய வகை, காய்கறிகள், கிழங்குகள், பழவகைகள், கீரைவகை என்பன அடங்கும். இத்தகைய இயற்கை தரும் உணவுகளை உண்ணும் பறவைகளும், ஊர்வனவும் விலங்குகளும் நோயின்றி முழுசக்தியுடன் வாழ்கின்றன. பறவைகள் பல மைல்கள் பறககின்றன. யானை, மாடு, ஆடு, மான், மரை போன்ற விலங்குகளும் பூரண சக்தியுடன் வாழ்கின்றன.

இயற்கை உணவுகளில் பச்சையாக உண்ணக் கூடிய மாம்பழம், அப்பிள், திராட்சை, பப்பாசி, நுங்கு, பனம்பழம், பேரிச்சம்பழம், கொய்யாப்பழம், வாழைப்பழம், அன்னாசி, தக்காளி, முந்திரி, வெள்ளரி, எலுமிச்சை, சீத்தா, பலா, நாவற்பழம், அத்திப்பழம் போன்ற பழங்களும், கருப்பஞ்சாறு, இளநீர், பச்சைப்பால், தேன், மழைத் தண்ணீர் போன்ற பானங்களும் மாங்காய், தககாளி, கரட், வெண்டிக்காய், பப்பாளி, நெல்லிக்காய், முள்ளங்கி, வெள்ளரிப் பிஞ்சு, தேங்காய், வேர்க்கடலை, முட்டைக்கோஸ், பீற்ரூட் போன்றவையும் அடங்கும்.

மருத்துவ மூலிகைகளாக வேம்பு, துளசி, அறுகு, மாவிலை, வெற்றிலை, வில்வம், அத்தி, அகத்தி, தும்பை, கண்டங்கத்தரி, நாவல், கீழ்க்காய் நெல்லி, குப்பைமேனி, வல்லாரை என்பன அடங்கும்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

மனித இனத்தைத் தவிர்ந்த தன்னிச்சையாகச் சுதந்திரமாகத் திரியும் ஜீவராசிகள் புதுமையடைவதுமில்லை. நோயுற்று, மற்றவர்களின் உதவியை நாடுவதுமிலலை. மூக்குக்கண்ணாடி போட்டதுமில்லை. இவற்றிற்குக் காரணம் ஆயுர்வேதத்தில் கூறப்பட்ட ஆறுசுவை உணவுகளை மதுரம், ஆம்லம், இலவணம, கடு, தக்தம், கஷாயம் என்ற உணவுகளை முழுமையாக உணபதேயாகும். ஆனால் மனிதனோ திக்த, கஷாய உணவுகளை அதாவது கைப்பு, கார்ப்பு (துவர்ப்பு) சுவைகளை விரும்பி உண்பதில்லை. இச் சுவையுள்ள உணவுகளான பாவற்காய், காத்தோடிக்காய், அகத்தி, சுண்டங்காய், வேப்பம்பூ, இவற்றை உண்பதால் இரத்தப் பெருக்கு நோய் தடைப்படும். நோய்க் கிருமிகள் உற்பத்தியாகாமல் தடை செய்யும், இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

ஆரோக்கியவாழ்விற்கு உணவிற்கு அடுத்தபடியாக முக்கிய இடம் பெறுவது சுவாசம். சுவாசம் மக்கள் உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கின்றது. சுவாசத்தின் உதவி கொண்டே நமது அவயவங்களின தொழிலகள் நடைபெறுகின்றன. ஆகவே சுவாசத்தின் பலமே நமது உயிர்ப்பலம். இத்தை உணர்ந்த நாம் சுவாசத்தை வழிப்படுத்துவதே சுகவாழ்விற்கும் தீர்கக ஆயுளுக்கும் தேக சக்தி (சுத்தி) மனோசக்தி (சுத்தி) ஆத்மசக்தி (சுத்தி) அடைவதற்கு உரிய மார்க்கமாகும்.

சுவாசத்தை வழிப்படுத்துவதற்குப் பிராணாயாமத்தை முதற்படியாகக் கொண்டே யோகசாதனங்களை வகுத்திருக்கின்றனர்.

நாம் செய்யும் தொழிலுக்குத் தகுந்தபடி நமது மூச்சு செலவாகின்றது. அது முறையான சுவாசப் பழக்கத்தினால் மறுபடியும் சேகரிக்கப்படுகின்றது. நாம் பேசும் பொழுது செலவாகும் சுவாசத்திலும் பார்க்க நடக்கும் பொழுது அதிகமாயும் வேலை செய்யும் பொழுது அதிலும் அதிகமாயும், கோபிக்கும் பொழுது அதிகமாயும், ஓடும் பொழுது அதிலும் அதிகமாயும் சம்போக காலத்தில் எல்லாவற்றிலும் அதிகமாயும் சுவாசம் செலவிடப்படுகின்றது. ஆகவே சுவாசம் அதிகமாகச் செலவாகும் தொழில்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

படுக்கையறையில் சனநெருக்கம் நல்லதல்ல. ஒரு அறையில் ஒருவர் மட்டும் படுத்தல் உத்தமம், ஒரு மெழுகுவர்த்தி ஒரு ஆள் சுவாசிக்கக் கூடிய காற்றைக கெடுக்கும். மண்ணெண்ணெய் தீபமோ இன்னும் அதிக தீமையை விளைவிக்கும். மின்சார தீபம் காற்றைக் கெடுக்க மாட்டாது. ஒவ்வொரு மனிதனும் சுகவாழ்வு பெறுவதற்கு சுவாசத்தை சுத்தமான, வெளியான இடத்தில் சுவாசிப்பது உகந்தது.

ஆயுர்வேதத்தில் ஆரோக்கியமாக வாழ்வதற்கு உணவு, சுவாசம், அடுத்தபடியாக அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கக் கூடிய பழக்கவழக்கங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. விரிவான விளக்கங்கள் அஷ்டாங்க ஹிருதயம் என்னும் நூலில் உள்ளது.

ஒவ்வொரு மனிதனும் அதிகாலையில் எழுந்து பல்துலக்கி இயற்கைக் கடன்களை முடித்து, உடல் முழுவதும் நல்லெண்ணெய் தேய்த்து ஸ்நானம் (வெந்நரிலோ, குளிர்ந்த நீரிலோ) செய்து, கண், சுவாசம் இவற்றிற்குப் பயிற்சி கொடுத்து சூரிய நமஸ்காரம் செய்தல் நலம்.

'ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி'

உடலைத் துப்புரவு செய்த பின்னர், மனத் தூய்மை பெறுவதற்கு, ஒரு சில நிமிடமாவது இறைவனை ஒரு மனதோடு தியானித்தல் வேண்டும். இதில் சுவாசம் ஒரு நிலைப்படுவது முக்கியம். இதனால் சுவாச உறுப்புக்களும் இருதயமும் தூய்மை பெறுகின்றது.

"வாக்குண்டாம் நல்லமனமுண்டாம்
மாமலரால் நோக்குண்டாம்
துப்பார் திருமேனி தும்பிக் கையான் பாதம்
தப்பாமல் சார்பார் தமக்கு"

நாம் என்ன நோக்கத்தோடு ஒரு செயலைச் செய்கிறோமோ அதன் முழுமையான பலனை இறைவனின் அருளால் தான் பெற முடியும். இதனால் மூளைக்கும் உடலுக்கும் ஆறுதல் ஏற்படுகின்றது.

வாரம இரு முறை எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தல், நாலுமாதத்திற்கொரு முறை பேதி சாப்பிடுதல் ஆகியவற்றால் ஆரோக்கியம் பெருகும்.

"வீறுசதுர் நாட்கொருக்கால்
நெய் முழுக்கைத் தவிரோம்
அடர் நான்கு மாதத்திற்கோர்
நாள் பேதியுரை நுகர்வோம்"

மாதத்தில் இரண்டு நான் உபவாசம் இருத்தல் நன்று இதனால் உடல் தூய்மை பெற்று நோய் அணுகாது. வெற்றிலை தரித்தல் (தாம்பூலம்) நன்று உடற்பயிற்சி எல்லா உறுப்புக்களுக்கும் ஏற்ற வகையில் செய்தல் வேண்டும்.

"கீதை படிப்பதைவிட காற்பந்து அடிப்பது மேல்"

விளையாட்டினால் உள்ளம் உறுதிபெறும், உணர்ச்சி வீறு கொண்டெழும், அடிமை உணர்ச்சி நீங்கும் நற்பண்புகள் பெரும் பசி உண்டாகும். தேகம் இறுகும். கால்நடை சிறந்த தேகப் பயிற்சி, கைகளை நன்றாக வீசி, கால் எட்டியவரை நன்றாக நீட்டி நடத்தல் வேண்டும். எப்பொழுதும் தலையைக் குளிர்ச்சியாகவும், கால்களைச் சுடாகவும் வைத்திருத்தல் வேண்டும். மனதை திருப்தியாகவம் சந்தோஷமாகவும் வைத்திருத்தல் ஆரோக்கிய வாழ்விற்கு அவசியமான எளிய வழிமுறைகளாகும்.

நீந்துதல், கயிறு அடித்தல், பரதநாட்டியம் என்பன உடலுக்கு உகந்த பயிற்சிகளாகும்.

இங்கு குறிப்பிட்ட நாளாந்த பழக்கவழக்கங்களை முறையாகக் கடைப்பிடிப்பதால் ஆரோக்கியமாக வாழமுடியும்.

மேலும் அஜீரணம், மலச்சிக்கல், தேகப்பியாசக்குறைவு, நல்ல பொழுது போக்கின்மை, மூளைக்கும் கண்களுக்கும் அதிக வேலை, வெய்யிலின் தாக்கம், பழுதடைந்த உணவு வகைகளை உண்ணல், தேயிலை, கோப்பி, மது, புகையிலை போன்ற வாகிரி உணவுவகைகளால் ஏற்பட்ட நச்சுத்தன்மைகளின் சேர்க்கை, மிதமிஞ்சிய போகம், வேகம், நரம்புப்பலவீனம் போன்ற இன்னோரன்ன காரணங்களாலும் நம் உடலில் நோய்குரிய குறிகுணங்கள் தென்படும் உ-ம் தலைவலி, உற்சாகமின்மை, கோபம். இதில தலைவலி ஏற்பட்டதும் தலைவலியை தணிக்கக் கூடிய மாத்தரைகளை விழுங்குவதால், நமது உடலில் ஏற்பட்ட கோளாறுகள் மறைந்து விடுகின்றன. இதனால் எமக்கு ஏற்படும் நோய் நிலை இன்னும் அதிகரிக்கின்றது. ஏனவே தலைவலி வருத்தும் அதன் காரணத்தை உணர்ந்து அதைத் தவிர்க்கும் முறைகளைக் கையாள வேண்டும். இதனால் நமக்கு ஏற்படும் பாரிய பின் விளைவுகளைத் தவிர்க்கலாம். உரிய நேரத்தில் நித்திரைக்குப் போதல் அதிகாலையில் நித்திரை விட்டெழுதல் உடல ஆரோக்கியத்திற்கு முக்கியம்.

நவநாகரீக காலத்தில் நோய்கள் பலவகையாய்ப் பெருகி வருகின்றன. ஏழைகள் மலிந்துள்ள நம்நாட்டில் நம் ஆயுர்வேத வைத்திய முறைகளைக் கொண்டு சிகிச்சை செய்வதோடு, தரமான உணவு முறைகளையும் அளவறிந்து உண்பதனால் நோய் வராமலும் தடுக்கலாம்.

"மருந்தென வேண்டலாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றியுணின்"

**டாக்டர்**
**திருமதி புருஷோத்தமன்**
**டி.ஏ.எம்**

மக்கட் பிறவியில் காணும் துன்பங்களில் நோயும் ஒன்று. பிணிதோன்றிய காரணத்தையும் அதை நீக்கும் உபாயத்தையும் தன்னகத்தே கொண்டது ஆயுர்வேதம். எனவே ஆயுர்வேதத்தில் கூறப்பட்ட மூலிகை மருந்து முறைகளைக் கைக்கொண்டு நோய் இன்றி வாழ்ந்தால் நூறாண்டு வழலாம்.

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்.
வாய்நாடி வாய்ப்பச் செயல்
என்றர் வள்ளுவர்"

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கும் தாவரம்" □

# வட-கிழக்கு மாகாண இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி

(கொழும்பு)

சுனாமியினால் வடக்கு-கிழககு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கென இளைஞர் யுவதிகளுக்கு கட்டட நிர்மாணத் தொழில்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தொழில்துறை சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சு, கல்வி வாழ்க்கை தொழில் பயிறசிக்கு உதவும அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் இந்தப் பயிற்சிகளை ஒழுங்கு செய்திருக்கின்றன.

தமிழ்மொழி மூலம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மேசன்வேலை, நீர் குழாய்களைப் பொருத்தும் வேலை, தச்சுவேலை, வீட்டு மின் இணைப்பு வேலை போன்ற பயிற்சி நெறிகளுக்கு பயிலுநர்களையும் இந்த நெறிகளுடன் தொடர்புடைய போதனா ஆசிரியர்களையும் தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகளில் சேர்ந்து கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தொழில் பயிற்சி, கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சு, இலக்கம் 64, காலி வீதி, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும் படி கேட்கப்பட்டுள்ளது. (க-9)

## உதவி கோரல்

பதுளையில் பரவிவரும இருதய நோய் தொடர்பான மேலதிக பரிசோதனைகளை நடாத்துவதற்கு உலக சுகாதார அமைப்பின் ஒத்துழைப்பைப பெற சுகாதார அமைசசுத் தீர்மானித்துள்ளது.

இந்த நோய் குறித்து உலக சுகாதார அமைப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-8)

### தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில்

# சுனாமியால் வீடிழந்தவர்களுக்கு தற்காலிக வீடுகள் கையளிப்புவிழா

(கிளிநொச்சி)

ஆழிப்பேரலையின் பேரழிவு காரணமாக தங்களது வாழ்வாதாரங்களை இழந்துள்ள வடக்குக் கிழக்குப் பிரதேச வாழ் மக்களுக்கு இடைக்காலக் குடியிருப்புகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்து குடியிருத்தி வருகின்றது.

அதன் தொடர் வேலைத் திட்ட நடவடிக்கையாக அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பட்டைத் திடலில் 150 வீடுகளைக் கொண்ட தற்காலிகக் குடியிருப்பு ஒன்றினைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்துள்ளது. இத்தற்காலிகக் குடியிருப்புக் கிராமம்ானது நாளை புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுள 150 குடும்பங்களுக்கு இவ் வீடுகள் ஒப்படைக்கப்படவுள்ளன. இக்குடியிருப்பின் அடிப்படைத் தேவைகளைப் பொறுத்து கணிசமான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையில் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய குடும்பங்களுக்கான குடியிருப்புக்களையும் அமைப்பதற்காக வேலைத்திட்டச் செயற்பாடுகளில் தமிழர் புனர்வாழவுக் கழகம் ஈடுபட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ப)

# இன்று ஒரு தகவல்

## கைரேகை மருத்துவம்

ஒருவர் அதிர்ஷ்டலாபச் சீட்டு வாங்க வேண்டுமென ஆசைப்பட்டார். அதை வாங்குவதற்கு முன்பு நமது அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்வோம் என்று நினைத்தார். அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டடே நடந்தார். வழியில் கைரேகை ஜோசியர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவரிடம் கையை நீட்டினார். "அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறது என்று பார்த்துச் சொல்லுங்கள்" என்றார்.

அவரும் பார்த்தார். "அதிர்ஷ்டம் பிரமாதமாக உள்ளது. நீங்கள் உயர்ந்த இடத்திற்குப் போகப்போகிறீர்கள்" என்றார். அதைக் கேட்டதும் இவருக்கு மிகவும் சந்தோஷம். உற்சாகத்துடன் ஓடிப்போய் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டு வாங்கினார்.

கொஞ்சநாள் கழித்து அவரை வழியில் பார்த்தேன் "என்ன சார்? பரிசுவிழுந்ததா? அவர் சொன்னது பலித்ததா?" என்று கேட்டேன். "பரிசு விழவில்லை! ஆனால் அவர் சொன்னது பலித்தது" என்றார். "எப்படி" என்று கேட்டேன். "பரிசு விழுந்திருக்கிறதா என்று பார்ப்பதற்காக பத்திரிகை வாங்குவதற்கு மிக அவசரமாக ஓடினேன். பரிசு விழவில்லை அதற்குப் பதிலாக நான்தான் தவறிப்போய் ஒரு பள்ளத்தில் விழுந்துவிட்டேன எலும்பு முறிவு. இவ்வளவு நாளும் ஆஸ்பத்திரியில் இருநதேன். ஆஸ்பத்திரியில் மேல்மாடியில் இருந்தேன் அதைத்தான் அந்த ஆள் உயர்ந்த இடத்திற்கு போகப் போகிறீர்கள் என்று சொல்லியிருப்பார் போலிருக்கிறது" என்றார்.

கைரேகை அதிர்ஷ்டத்தைக் கண்டு பிடிக்கிறதோ இல்லையோ வயிற்றில் வளரும் குழந்தை எப்படி என்பதைக் கண்டு பிடிக்கிறது. அதுதான் கைரேகை மருத்துவம் **Medical palmistry** ஒரு குழந்தை பிறப்பதற்கு முன்னே அதைப பற்றிய சில இரகசியங்களை அதனுடைய தாய் தந்தை யின் கையைப் பார்த்துக் கண்டுபிடித்து விடுவார்களாம். மேற்கு ஜேர்மனியில் சில மருத்துவ ஆய்வாளர்கள் ஒரு கணனி புரோக்கிராம் செய்திருக்கிறார்கள்.

இது என்ன செய்யும் என்றால் பெற்றோரின் கைரேகையை அலசி ஆராய்ந்து குழந்தை பிறப்பதில் ஏதாவது பிரச்சினை உருவாகுமா என்பதை முன்கூட்டியே கண்டுபிடித்து சொல்லும். பொதுவாக உள்ள பத்து வகையான வம்சாவழிக் கோளாறுகளை இதன்மூலம் கண்டுபிடித்துவிடலாம்.

**Mongolism** என்பது ஒரு கோளாறு. இது ஒரு வகையான **Mental retardation.** மனவளர்ச்சி குன்றிப் போய் விடும். சாதாரணமாக ஆயிரத்தில் ஒரு குழந்தை இப்படி பிறந்து விடுவதுண்டு. இப்படி **Mongolism** உள்ள குழந்தைகளின் உள்ளங்கையில் சில குறிப்பிட்ட சுழிகள் இருக்கும். இது ஏற்கனவே விஞ்ஞானிகளுக்குத் தெரிந்த ஒருவிடயம். இப்போது என்ன செய்கிறார்கள் என்றால் பெற்றோரின் கைரேகையையும், பிள்ளைகளின் கைரேகையையும் ஒப்பிடடுப் பார்த்து அதில் ஏதாவது சம்பந்தம் உள்ளதா என்று பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கும் போது சில விடயம் தெரிந்தது.

1980 இல் மரபியல் வல்லுனர்கள் ஒரு விடயத்தைக் கவனித்தார்கள். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பெற்றோரில் ஒரு 12 வீதமான தாய்மார் ஒரு சில தந்தைமார் ஆகியோரின் உடல நலமாக இருந்தால் கூட பிள்ளைக்கு உள்ள சில உடல் வேறுபாடுள் இவர்களுக்கும் உண்டு.

மேற்கு ஜேர்மனியில் இந்த ஆராய்ச்சியில் இன்னும் ஒரு படி முன்னேறியுள்ளனர். கையிலுள்ள 50 துல்லியமான அறிகுறிகளை பட்டியல் போட்டிருக்கிறார்கள் சில மிகத்துல்லியம். வெறும் கண்ணால் பார்க்க முடியாது லென்ஸ் மூலம் தான பார்க்கமுடியும். ஆனால் கணனி மூலமாக அந்த **Hand print** ஐ ஆயிரக்கணக்கான மற்ற **Hand print** உடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். **Mongolism** மட்டுமல்ல பலவிதமான மரபியல் குறைபாடுகளைக் கண்டுபிடித்துவிடலாம். குழந்தை குள்ளமாக இருந்தாலும் கூட கண்டுபிடித்து விடலாம்.

அதனால் பிறக்கப்போகும் குழந்தையின் மனவளர்ச்சி, உடல்வளர்ச்சி சரியாக இருக்காது என்ற இரகசியம் தாய் தந்தையின் கைரேகையில் உள்ளது. அப்படி இருந்தால் முன்னரே பாதுகாப்பாக கருச்சிதைவு செய்யலாம். அவலமான ஒரு உலக வாழ்க்கையை அனாவசியமாக ஒரு உயிருக்கு ஏன் கொடுக்க வேண்டும்.

ஒரு அப்பா சொன்னார் "மனவளர்ச்சி குன்றிப்போவது ஒரு புறமிருந்தாலும் இந்தக்காலத்தில் குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சி அதிகமாக இருக்கிறது அதுதான் பிரச்சினை" என்றார். "எப்படி?" என்றேன். அவர் தனது பிள்ளையைப் பற்றி விபரம் சொன்னார்.

அவன் கேட்டானாம் "ஏனப்பா! அப்பா சொல்வதைத்தான் பிளளைகள் கேட்க வேண்டுமா? பிள்ளைகள் சொல்வதை அப்பாமார் கேட்கக் கூடாதா?" என்று.அப்படி இல்லை! பிள்ளைகளை விட அப்பாமாருக்கு அறிவும் அனுபவமும் கூட என்றார் அப்பா. "அப்படியா" என்றானாம். ஆமாம் என்றார்.

"சரி ரேடியோவைக் கண்டுபிடித்தது யார்?" என்றான. 'மார்க்கோணி' என்றார் அப்பா. "அதை ஏன் அவனது அப்பா கண்டு பிடிக்கவில்லை?" என்றான் பையன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ரணில் ஜனாதிபதியானவுடன் எஸ்.பி யை விடுதலை செய்வார்

## -ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

எஸ்.பி. திஸநாயக்கவை ஜனாதிபதி சந்திரிகா விடுதலை செய்யாவிட்டால் அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டி ஜனாதிபதியாக பதவி ஏற்றவுடன் அவர் எஸ்.பிக்கு பொது மன்னிப்பளித்து விடுதலை செய்வார் என நாடாளு மன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

எஸ்.பி யை விடுதலை செய்யுமாறு வலியுறுத்துவதற்காக எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்யக் கோரி இம்மாதம் 21ஆம் திகதி கண்டி ஸ்ரீ தலதா மாளிகாவிற்கு முன் 10ஆயிரம் பேர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்திலேயே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார். இவ்வாலோசனைக் கூட்டத்தில் மததிய மாகாணத்தின் மூன்று மாவட்டங்களான கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளரகளும் நகர, கிராம கட்சியின் கிளை அமைப்பாளர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

கண்டி டி.எஸ்.சேனாநாயக்க வாசிகசாலை கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கண்டி மாவட்ட ஐ.தே.கட்சி அமைப்பாளர் கெலிய ரம்புக்வல எம்.பி. தலைமையில் நடைபெற்ற இவ்வாலோசனைக் கூட்டத்தில் களுத்துறை எம்.பி. ராஜிதசேனாரத்ன, மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் வசந்த அலுவிகார, மத்திய மாகாண சபை ம.ம.மு. உறுப்பினர் எஸ்.ராஜரட்ணம், மத்திய மாகாண நகரசபை, மாநகர சபை, பிரதேச சபைத்தலைவர்களும் உறுப்பினர்களும கலநதுகொண்டனர். மத்திய மாகாண ஐ.தே. கட்சி கிளைகள் அனைத்தும் தலா 250 பேர் வீதம் இச்சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொளவதென்றும இம்மாதம் 21ஆம் திகதி கண்டி ஸ்ரீ தலதாமாளிகாவிற்கு முன் இப்போராட்டத்துடன் ஆரம்பிப்பதெனவும் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ற)

# மருத்துவப் பணிகளில் கிரேக்கக் கப்பல்

(திருகோணமலை)

அரசாங்கத்தின் எதிர்ப்பால் பலத்த சர்ச்சைக்குள்ளாகி திருகோணமலையில் நிறுத்தப்பட்டுள்ள கிரேக்கக் கப்பல், அரசாங்கம் விதித்துள்ள சில நிபந்தனைகளின் அடிப்படையில், தனது மருத்துவப் பணிகளை ஆரம்பித்துள்ளது.



ஒரு நாளுக்கு வைத்திய வசதி அளிக்கும் நோயாளிகளின எண்ணிக்கை மட்டுப் படுத்தப்பட்டுள்ளதுடன், ஒரு நேரத்தில் ஆகக் கூடியது ஆறு நோயாளிகளையே கப்பலின் உள்ளே எடுத்து சிகிச்சையளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், இவ்வாறு கப்பலில் சிகிச்சையளிக்கப்படும் நோயாளிகள், அதற்கு முன்னதாக அருகில் இராணுவத்தால் உருவாக்கப்பட்டுள்ள பிரத்தியேக தற்காலிக கூடாரத்திற்கு எடுத்துவரப்பட்டு, அங்கிருந்து இராணுவத்தினரின் விசேட அனுமதியுடனேயே கப்பலுக்கு கூட்டிச்செல்லப்பட வாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஓசன் மொனாக்' என்ற இந்த கிரேக்கக் கப்பல், திருகோணமலை துறைமுகத்தை கடந்த 5ஆம் திகதி வந்தடைந்தது. கடலில தரித்து நின்று மருத்துவ சிகிச்சை வழங்கததக்கதாக, அந்தக் கப்பலை ஒரு நடமாடும் வைத்திய சிகிச்சை நிலையமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இத்தகைய மருத்துவ வசதியை வழங்குவதற்கு முன்னர் அரசு வழங்கிய அனுமதியை மீளப்பெற்றுக்கொண்டு, நோயாளிகள் கப்பலுக்கு எடுத்துச் செல்லப்பட அனுமதி மறுத்ததையடுத்து சர்ச்சை தொடர்ந்தது. இறுதியில், பலத்த நிபநதனைகளை விதித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலையிலிருந்து இந்த மருத்துவ சேவையை வழங்குவதற்கு அரசு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியை வழங்கியுள்ளது. (ற)

# வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட இ.போ.ச. ஊழியர்கள் அனைவரும் பணியிலிருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

பணிக்குச் சமுகமளிக்காத சகல இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களும் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் ஐ.எஸ்.தயாரட்ண தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தமக்கு 2ஆயிரத்து 500 ரூபாவால் சம்பளம் அதிகரிக்கபட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையிலே, இவ் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வேலைகளை இழந்தவர்களின் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளதாகவும் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் உள்ள சகல பிரிவுகளிலும் பல வெற்றிடங்கள் உள்ளன. எனவே, உரிய தகைமைகள உள்ளவர்கள் இந்த வெற்றிடங்களுக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பும்படி வேண்டுகோள்விடுத்துள்ளார்.

தற்சமயம் ஆயிரம் வெற்றிடங்கள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

# பொது மக்களுடன் தளபதிகள் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரை பிரதேச தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கதிரவெளியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம், அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்,கேணல் பால்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போதைய அரசியல் நிலை பற்றியும் அரசியல் நடைமுறைகள் பற்றியும் இங்கு எடுத்துக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளராக இருந்த கௌசல்யனின் படுகொலை தொடர்பாக மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த அச்ச உணர்வுகளைக் களையும் முகமாகவே இச் சந்திப்பு ஏற்படுததப்பட்டது. (ற-4)

# பிரதமர்-அகாஷி சந்திப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பிரதேசங்களிலும் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் தொடருமென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி அலரிமாளிகையில் கடந்த வெளளிக்கிழமை பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட தென் பகுதியில் மேற்கொள்ளப்படும் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் அகாஷியிடம் உறுதியளித்தார்.

ஆழிப்பேரலைகளின் பின் அரசாங்கத்தின் புனரமைப்பு மற்றும் நிவாரணப்பணிகள் உட்பட பல விடயங்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளன. (ற-8)

# 14 சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

சுனாமிப் பேரலையின் போது காணாமல் போன 14 பேரின் சடலங்கள் காலியில் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டன.

அப்பிரதேச மக்கள் வழங்கிய தகவல்களையடுத்தே இந்தச் சடலங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

நீர் நிறைந்திருந்த சேற்றுக்குழிகளில் நீர்மட்டம் குறைந்ததையடுத்தே இந்தச் சடலங்கள் தென்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதும் சடலங்களை இனங்காண முடியாத அளவுக்கு அவை சிதைவடைந்துள்ளன. நீதிவான் விசாரணைகளையடுத்து ஒரே குழியில் சடலங்கள் புதைக்கப்பட்டன. (ற-8)

# மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த அனைவருக்கும் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுவிட்டதாக அப்பகுதி பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் தெரிவித்தார்.

எனினும் மரணச்சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றிருந்தும் அதற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் சிலருக்கு இதுவரை கிடைக்கவில்லை என பொது மக்கள் சிலர் தெரிவிக்கின்றனர். (ற-43)

# சங்கிலியை அறுத்தவருக்கு ஒரு வருட கடூழியசிறை!

(துன்னாலை)

தங்கச் சங்கிலியை அறுத்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றால் ஒரு வருட கடுழீய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நபர் பெண் ஒருவரின் 19 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடியவேளை பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டு நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் துன்னாலை தெற்கைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகின்றது.


இவரை கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய வேளை குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து பருத்தித்துறை நீதிபதி க.அரியநாயகம் குறித்த குற்றவாளிக்கு ஒருவருட கடுழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை, குறித்த நபருக்கு மேலும் பல குற்றச்சாட்டுக்களின் பெயரில் மேற்படி மன்றில் பல வழக்குகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-101)



ஞானாசாரியர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் எம்.பி மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம்.
(படம்:- எஸ். சுபாஸ் சந்திரபோஸ்



முன்னாள் யாழ். நகர பிதா எஸ்.எஸ். நவரட்ணம் ஞாபகார்த்தமாக கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்துகொண்ட இப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் எஸ்.மகாதேவா JP மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும், அருகில் பாடசாலை அதிபர் க.செல்வக்குமாரனையும் படத்தில் காணலாம்.

# ‘நெஞ்சு கனக்கும் நினைவுகள்’ கவிதைத் தொகுப்பு அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ‘நெஞ்சு கனக்கும் நினைவுகள் ’ கவிதைத் தொகுப்பு அறிமுகவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செ. செல்வகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் சிறப்புரையாற்றவுள்ளார்.

விழாவின் இறுதியில் சிறப்புக்கவியரங்கு நடைபெறும். (து)

# வீடியோ படம் பிடித்தவர் நகைகளை திருடினார்

(மாத்தறை)

திருமண வீடுகளில் ‘வீடியோ’ படம் பிடிக்கும் பரணியில் நகைகள் மற்றும் கையடக்கத்தொலைபேசி என்பவற்றை திருடி வந்த ஒருவரை மாத்தறை பொலிஸார் கடந்த செவ்வாயன்று கைதுசெய்தனர்.

திருடப்பட்ட சில பொருட்களும் நகைகளை அடகு வைப்பதற்கான பற்றுச்சீட்டுக்களும் இவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மாத்தறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (க-9)

# பட்டதாரிகளுக்கு பயிற்சி

(பொன்னாலை)

பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்கங்களில் இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிப் பயிலுநாகளுக்கு முன்று நாள் வதிவிடப் பயிற்சி நெறி ஒன்று சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் வடக்கு -கிழக்கு பெருநதோட்டப் பிரதிப் பணிப்பாளரால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியானது இம்மாதம் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை மருதானையில் உள்ள 281டீன்ஸ் வீதியில் இருக்கும் சி.எஸ். ஆர். பயிற்சி நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ப-49)

# அனுமதியின்றி மாட்டை வெட்டிய மூவருக்கு 10,500 ரூபா அபராதம்

துன்னாலைப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மாடு ஒன்றை இறைச்சிக்காக வெட்டிய மூவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிபதி க. அரியநாயகம் முன் முற்படுத்தியவேளை, குறித்த குறறவாளிகள் மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் தலா 3 ஆயிரத்து 500 ரூபா வீதம் 10ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுததுமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

இதேவேளை, மேற்படி இறைச்சிக்காக வெட்டிய மாடு பயிர் அழிவை ஏற்படுத்திய வேளை துரத்திப்பிடிக்க முற்பட்ட போது நீரில மூழ்கி இறந்த பின்னர் இவர்களுக்கு விற்கப்பட்டதெனவும் அறியமுடிகிறது. (க-101)

# ஜே.வி.பி சுதந்திரக்கட்சி இடையே இணக்கத்தை ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் சுதந்திரக்கட்சிக்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாட்டினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு கட்சிகளையும் சந்திக்க வைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஜே.வி.பியினால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த மற்றும் அமைச்சர் மைத்திரி பாலசிறிசேன ஆகியோரின் மூலமாக ஜனாதிபதிக்கு தூதுவிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

# ஆசிரிய நியமனங்கள்

(கல்வியங்காடு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை அடிப்படையில் ஆசிரிய நியமனம் பெறவுள்ள சகலருக்கும் ஒன்றாகவே நியமனங்கள் வழங்கப்படும் என வடக்கு- கிழக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கிருஸ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை அடிப்படையில் ஆசிரிய நியமனம் பெறுபவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இரு கட்டங்களாக இடம்பெறுகிறது.

இதில் முதல் முறை நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு தொிவு செய்யப்பட்டோர் எண்ணிக்கை குறைவாகவுள்ளதால் நடைபெற்று முடிந்த பாட்சை முடிவின் அடிப்படையில் சம்பந்தப்பட்டோருக்கு இரண்டாம் முறையாகவும் நோமுகத் தேர்வு நடைபெற்று வருகிறது.

இந நேர்முகப் பரீட்சை கடந்த 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்பட்டவர்களையும் இணைத்து கல்வி அமைச்சிற்கு அனுப்புவோம். கல்வி அமைச்சின் சிபார்சின் அடிப்படையிலேயே இவர்களது நியமனங்கள் வழங்கப்படவுள்ளது என அவர் தெரிவித்தார்.(க-74)

# சிநேக பூர்வ கிரிக்கெற் போட்டி கனகரத்தினம் ம.ம.வி வெற்றி

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேக பூர்வ கிாிக்கெற் ஆட்டத்தில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் கொண்ட இக் கிரிக்கெற் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 50 ஓவர் முடிவில் 8விக்கெற்றுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் கபிலன், திவாகரன் ஆகிய இருவரும் தலா 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி வீரர் ரஜீவ்குமார், சியாம்சன் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் வித்தியாலய அணி 42 ஓவர்களில் 7 விக்கெறறுக்களை இழந்து 208 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது. இதில் கஜதீபன் 84 ஓட்டங்களையும் ரஜீவ்குமார் 36 ஓடடங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வீரர் ஜெயகிருஷ்ணா 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். (ப)

# போக்குவரத்து சேவையை நீடிக்குமாறு கோரிக்கை

(தென்மராட்சி)

நாவற்குழிப் பாலத் திருத்த வேலைகள் காரணமாக A-9 பாதை மூடப்பட்டதையடுத்து அரியாலைப்பிரதேச மக்கள் போக்குவரத்தில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அரியாலையில் இருந்து யாழ். வைத்தியசாலைக்கும்,பாடசாலைக்கும் மற்றும் ஏனைய தேவைகளுக்காகவும் யாழ்.நகர் வரும் மக்கள் இதனால் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து கசசேரி வரையிலான போக்குவரத்து சேவையை அரியாலை வரை நீடிக்குமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (க-36)

## நைந்த நெஞ்சத்தாரை ஆண்டவர் காப்பாற்றுவார்

### தவக்காலச் சிந்தனை

‘உமது ஆட்சி வருக’ என்பதுவே இயேசுவின் செபத்தின் மையம். இயேசு தன்னையோ, தனது வாழ்வையோ, மையப்படுத்தாது முழுமையான மனிதருடைய நிறைவாழ்வை மையமாகக் கொண்ட இறையாட்சி செபம். நம்பிக்கை மட்டும் போதும் நடைமுறை வாழ்வில் செயல்படத் தேவையில்லை என்ற கூற்றை உடைத்துச் செயல்பட அழைப்பு விடக்கூடிய செபம். நம் செபத்தில் கேட்பதையே மையமாக வைத்து இயேசு ஒரு வியாபாரியாகவும், மருத்துவராகவும், அற்புதங்களைச் செய்யக் கூடியவராகவும், கேட்பதை கொடுப்பவராகவும் மாற்றியிருக்கின்றோம். அதனால்தான் எண்ணற்ற திருத்தலங்கள் வந்தும், எண்ணிக்கையில் அடக்க முடியாச் செபக்கூட்டங்கள் நடத்தியும் சமூக மாற்றம் என்பத நிகழாமல் உள்ளது. இச்சூழலில் இச்செபம் மதத்திற்கு அப்பாற்பட்டு மனித நேயத்திற்கு முக்கியத்துவம் கொடுகின்றது. மானிடம் முழுவதையும் ஒன்றிணைக்கக் கூடிய செபமாகவும் உள்ளது.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# அறிவுச்சோலை மாணவர்களின் வளர்ச்சிக்கு ஜப்பான் அரசு இயன்ற உதவிகளை வழங்கும்

## பழுகாமத்தில் யசூசி அகாஷி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

நீங்கள் எல்லோரும் கடந்த இருபத்தாறு வருடகாலமாக யுத்தத்தால் பாதிககபபடடுள்ளாகள. இவ்வாறான நிலையில் சுனாமி அனர்த்தத்தாலும் பாதிககப்படடுளளமையை நினைக்கும்போது கவலையாகவுள்ளது. இவ்வாறு பழுகாமம் காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு வருகைதந்த ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது அழிவுகளைக கணடு நாம துவண்டுவிடக்கூடாது. உறுதியும் உழைப்பும் நம்பிக்கையும் இருக்குமானால நாம முன்பு இருநததைவிடப பல மடங்கு சிறப்புக்களுடன் வளர்ச்சியடைய முடியும். இதறகு எமது ஜப்பான் நாடு உதாரணமாக அமையும். இதைவிடப் பாரிய பேரழிவைச் சந்தித்தது எமது நாடு. நாங்கள் அதைவிடப் பல மடங்கு இனறு வளர்சசியடைந்துள்ளோம், நீங்களும் மன உறுதியுடன் செயற்படவேண்டும். உங்களுக்கு வழிகாட்டிகளாகச் செயற்படுபவர்களின் அறிவுரைகளுக்கு ஏறப சிறந்த கல்வியறிவைப பெற்று முன்னேறவேண்டும்.

உங்களது வளர்ச்சிக்கு எம்மாலான முழு உதவிகளையும நாம் வழங்கத் தயாராகவுள்ளோம். எதிர்காலத்தில் முடிநதளவு உதவிகள் உங்களைச் சேரும். நீங்கள் என்றும் மகிழ்ச்சியாக இருக்க ஆசி கூறுகிறேன் என்றார். இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச செயலகப் பணிபபாளா புலித்தேவன், மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், மாவடி முன்மாரிக கோட்ட இராணுவத்தளபதி ரமணன் ஆகியோரும், பழுகாமம் விபுலானந்தா சிறுவர் இலலம், திலகவதியாா சிறுமியா இல்லம ஆகியவற்றின் சிறார்கள் உட்படப் பொதுமக்கள பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை யசூசி அகாசி பால்முனை பிரதேசத்தில் சுனாமியால் பாதிபபுற்ற முஸ்லிம மக்களைச் சென்று சந்தித்ததுடன தமிழா புனாவாழவுக்கழகத்தின் துயாதுடைபபுப் பணி குறித்தும் ஆராய்ந்தாா். அத்துடன் மட்டக்களப்புக்கும் சென்று பார்வை



யிட்டார். அவருடன் மடடு -அமபாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் சென்றிருந்தனர். (ப)

## நாட்டை மீளக்கட்டியெழுப்ப 8கோடி 10லட்சம் டொலரை ஜப்பான் அரசாங்கம் வழங்கும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தை அடுத்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் இலங்கையின் முயற்சிக்குப பெருமளவு உதவியளிப்பதாக ஜப்பான் உறுதியளித்துள்ளது.

அதற்கமைய இலங்கைக்கு அவசரகாலச் சுனாமி உதவியாக 8 கோடி 10இலட்சம் அமெரிகக டொலரை அன்பளிப்பாக வழங்க ஜப்பான் முன்வந்துள்ளது.

நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கடந்தவாரம் டோககியோவிற்கு மேற்கொண்ட விஜயததினபோது ஜபபானிய அமைச்சர்கள் இந்த வாக்குறுதியை அளித்தனர்.

ஜப்பானிய நிதியமைச்சர், வெளிநாட்டு அமைச்சர் ஆகியோரை அமைச்சர் கலாநதி சரத் அமுனுகம இந்த விஜயத்தின்போது சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை அரசாங்கததின புனாநிர்மானப் பணிகளுக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் ஜப்பானின் கடல் கடந்த அபிவிருத்தி உதவிததிட்டத்தின மூலம் உறுதியளிப்பதாக ஜப்பானிய அமைச்சாகள் உறுதியளித்தனர்.

அடிப்படைக் கட்டமைப்பு, அபிவிருத்தி தொழில்நுட்ப ஆதரவு மனித வளங்கள் ஆகிய துறைகளில் இந்த உதவி வழங்கப்படவிருக்கின்றது.

சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கியின் ஆளுநருடனும், அமைச்சா சரத அமுனுகம விரிவான பேசசுவார்த்தைகளை நடத்தினார்.

இப்பேச்சுவார்த்தையில் இலங்கையின் கடற்றொழில், மின்சாரம், நீர்ப்பாசனத்துறை ஆகியவற்றில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திடடங்களுககு உதவி வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டு இருக்கின்றது. (க-9)

## கோயில் திருவிழாவின்போது ஒலிபெருக்கிப் பாவனைகளை மட்டுப்படுத்துவதற்குத் தீர்மானம்

(சங்கானை)

கோவில் திருவிழாக் காலங்களில் ஒலிபெருக்கிகளின் பாவனையை மட்டுப்படுத்துதவற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலிமேற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காகக் கோவில் நிர்வாகிகளை அழைத்து அவர்களுக்கு இது சம்பந்தமான அறிவுறுததல்களையும் வழஙக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதைவிடப் பாடசாலை செலலும் வயதில் வேலைக்குச் செல்லும் இளையோரினால் எதிர்காலச் சந்ததியினருக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கட்டுப்படுத்தவும்,

தனிப்பட்டோரின் நடவடிக்கைகளால் வீதிகள் சேதமடைவதைத் தடுக்கவும நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ப-20)

## திருட்டு

(சங்கானை)

கோண்டாவில் கிழக்குப் புகையிரதநிலைய வீதியில் அமைந்துள்ள நகைத்தொழிலகம் ஒன்று கடந்த சனி இரவு வேளை கதவு உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளது.

இதுகுறித்து உரிமையாளா கோபபாய் பொலிஸில முறைபபாடு ஒனறை தெரிவிததுளளார். (ப-130)

## அயல்வீட்டாருடன் மோதல்; இருவருக்கு 6மாதகால சிறை

(துன்னாலை)

அயல்வீட்டாருடன் மோதலில் ஈடுபடட ஒரே குடும்பத்தைசசேர்ந்த இருவருக்குப் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் 6மாதகால சிறைத் தண்டனையை விதித்ததுடன தலா மூவாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

குடவத்தைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

அயல்வீட்டிலுள்ள பெண் ஒருவரை இருநபர்கள் வாளால் வெட்டியும், தடியால் அடித்தும் காயப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண் பொலிஸாரிடம் செயத முறைப்பாட்டையடுத்து இவ்விடயம் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியின் கவனத்துக்குக கொணடுவரப்பட்டது.

இச்சம்பவம் குறித்த முறைப்பாட்டை விசாரணை செய்த நீதிவான் 6மாதகால தண்டனையை விதித்து மூவாயிரம் ரூபா அபராதம் செலுத்தவேண்டும என உத்தரவிட்டார்.

அவ்வாறு குறித்த அபராதத்தினை செலுத்தத் தவறின் மேலும் 4மாதகாலம் சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (க-101)

## இராணுவத்தால் முறியடிப்பு

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கிலுள்ள சாராய விற்பனை நிலையம் ஒன்று கடந்த சனி இரவு உடைத்துத் திருடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நிலையம் உடைக்கப்பட்டவேளை அருகிலுள்ள முகாமிலிருந்த இராணுவததினர் உசாரடைந்தமையால் கள்வரின் முயறசி கைவிடபபட்டு கள்வர்கள் தப்பியோடியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவ்விடயம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ப-130)

## வீதி விதிமுறைகளை மீறிய ஆசிரியர்களுக்கு அபராதம்

(துன்னாலை)

மோட்டார் சைக்கிள்களை சமாந்தரமாக ஓட்டிச்சென்ற இரு ஆசிரியாகளுககு பருததிததுறை மாவட்ட நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் மற்றும் அச்சுவேலிப் பகுதிகளைச் சேர்ந்த மேற்படி இரு ஆசிரியர்களும் வல்லைப் பகுதியூடாக மோட்டார் சைக்கிள்களைச் சமாந்தரமாக ஓட்டி வந்துகொண்டிருந்தபோது அவர்களை வழிமறித்துப பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் குற்றப்பத்திரத்தைப் பதிவுசெய்தார்.

பின் அவர்கள் நெல்லியடிப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது அவ் இருவரில் அச்சுவேலியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவருக்கு 2ஆயிரத்து 500 ரூபாவும், மானிப்பாயைச் சேர்ந்த மற்றொரு ஆசிரியருக்கு 2ஆயிரத்து 300 ரூபாவும் அபராதமாக விதித்த நீதிவான் அவர்களுக்குக் கடுமையாக எச்சரிக்கை விடுத்தார்.

இவ்விரு ஆசிரியர்களும் வடமராட்சிப் பகுதியில் இருநது இயங்கும் கல்வி நிறுவனத்தில் கற்பித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே அவர்கள் வீதி விதிமுறைகளை மீறி மோட்டார் சைக்கிள்களை ஓட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ப-101)

## மதுபோதையில் மீன் வியாபாரிகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மீன் சந்தையில் மீன் வியாபாரிகள் மது போதையில் இருப்பதால் அங்கு வரும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்கவேண்டியதாகத் தெரியவருகின்றது.

மீன்சந்தைக்கு அருகாமையில் சாராயத் தவறனை இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## உதவி

(பொன்னாலை)

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் கற்றல் உபகாணங்களை வழங்கிவருகின்றனர்.

இத்திட்டத்தின் ஒரு அங்கமாக வேலணை சைவப்பிரகாச விததியாலய மாணவர்களுக்குக் கடந்த திங்கட்கிழமை கற்றல உபகரணங்களை இந்நிலையத்தினர் வழங்கியிருக்கின்றனர். (ப-49)

***

(கல்வியங்காடு)

முகமாலையைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்சிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட த.ரமேஸ என்பவர் தனது சொந்த நிதியிலிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கான உதவு பொருட்களை வழங்கியுள்ளார்.

சுமார் 2லட்சத்து 68 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ் உதவு பொருட்களில் வீட்டுப்பாவனைப் பொருட்கள் கல்வி உபகரணங்கள் என்பன அடங்கும். (ப-74)

## திறப்பு

(சங்கானை)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வட்டுக்கோட்டையில் கிராமிய வங்கிக் கிளை ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி இக்கிளையினைக் கூட்டுறவுப் பரிசோதகர் இ.புவனராஜ் திறந்து வைத்தார். (ப-20)

## ISO 9001 சான்றிதழ்

(கொழும்பு)

ஆயுாவேத உற்பத்திப் பொருட்களுக்கு முதன் முறையாக ISO 9001 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற வைபவமொன்றில் (f)பெயார் (f)பாமர் ஆயுர்வேத உற்பத்தி நிறுவனம் இவ்விருதைப் பெற்றுக்கொண்டது.

இந்நிறுவனத்தின் ஆயுர்வேத மருந்துகள் மூலம் கடந்த வருடம் ஐநூறுக்கு மேலான இருதய நோயாளர்கள் குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## மெய்வல்லுனர் போட்டி

(பொன்னாலை)

கைதடி - கலைவாணி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப்போட்டி நாளை பிற்பகல் 2.00மணிக்கு அதிபர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராகத் தெனமராடசிக் கல்வி வலயக் கணக்காளர் க.பொன்னுத்துரை கலந்துகொள்கின்றார். (ப-49)

## கோழிக்குஞ்சுகள் விநியோகம்

(பொன்னாலை)

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்தியசாலையில் நலலின சேவல் மற்றும் பேட்டுக் கோழிக்குஞ்சுகள் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

எனவே நல்லினக் கோழிக் குஞ்சுகளைப் பெற விரும்புவோா முன்கூட்டியே தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-49)

## விபத்து

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் கோண்டாவில் பகுதியில இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் மிதிவண்டி விபததில வயோதிபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. (ப-130)

***

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டைச் சந்தியில் கடந்த ஞாயிறு மாலை 3 மணியளவில் ஏற்பட்ட வான் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீதியால் வந்துகொண்டிருந்த வான் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே நடந்து வந்துகொண்டிருந்த பிரஸ்தாப குடும்பஸ்தரை மோதிவிட்டுத் தப்பி ஓடிவிட்டது.

இதில் காயமடைந்த அன்ரன் என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப-72)

## திருட்டு

இரவுவேளை யன்னல் கம்பிகளைத் தகர்த்துவிட்டு உட்புகுந்த திருடர் வீட்டில் இருந்த ஒரு தொகைப் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கரவெட்டி கிழவி தோட்டப் பிள்ளயைார் கோவிலடியில் சென்ற வெளளிக்கிழமை இடம்பெற்றது. (ப-101)

## கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் இன்று செவ்வாய்கிழமை மு.ப.10.30 மணிக்கு கூட்டம ஒனறை நடத்தவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு பிரதேச செயலரே தலைமை தாஙகுகின்றார். (க-36)

# சுனாமியனர்த்தத்தைச் சாட்டாக வைத்து திறைசேரியை நிரப்ப ஜனாதிபதி முயற்சி

## தனியார் போக்குவரத்துச் சேவை சங்கங்களின் ஒன்றியம் கண்காணிப்புக்குழுவிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

**போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள இக்காலகட்டத்தில் அரசியல் மற்றும் மனிதாபிமானப் பணிகள் தொடர்பாக பயணங்களை மேற்கொண்டு வன்னியிலிருந்து மட்டக்களப்பு திரும்பிக்கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையிலான போராளிகள் மற்றும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு உட்பட்டோர் சதித்திட்டத்தின் மூலம் படுகொலைசெய்யப்பட்டமை அப்பட்டமான அரசியல் சதி முயற்சியாகும்.**

**இச்சதி முயற்சியையும், படுகொலைச் சம்பவத்தையும் யாழ்.மாவட்ட தனியார் போக்குவரத்து சேவைச் சங்கங்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதோடு இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதால் சமாதானம்என வாயளவில் பேசிக்கொண்டிருக்கும் ஜனாதிபதியின் செயற்பாடுகளில் உள்ள நம்பிக்கையீனத்தையும் இத்தால் வெளிப்படுத்துகிறோம்.**

இவ்வாறு தனியார் போக்குவரத்துச் சேவை சங்கங்களின் ஒன்றியம் தங்களது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

நிராயுதபாணிகளான கௌசல்யன் உட்பட்ட போராளிகளைப் படுகொலை செய்ததன்மூலம் விடுதலைப் புலிகளையும், தமிழ் தேசியத்தையும் வலிந்து போருக்கு இழுக்கும் தீயசக்திகளின் செயற்பாட்டுக்குப் பின்னணியை அரசு கடைப்பிடிக்கின்றது.

பேரினவாதம் பேசும் ஜே.வி.பி கட்சியைப் பங்காளிகளாக ஏற்றுக்கொண்டு அரசோச்சும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிலைதடுமாறும் அரசியல்மூலம் தனது அரசபோகத்தை தொடர்வதன் மூலம் தேசிய முக்கியத்துவம்வாய்ந்த இனப்பிரச்சினைத் தீர்வினை இழுத்தடிதுச்செல்வதை தமிழ்மக்கள் தொடர்ந்து விடுப்புப்பார்ப்பார்களென பேரினவாத அரசு எதிர்பார்க்கின்றதா?

தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு முகத்தையும், பேரினவாத ஜே.வி.பிக்கும் ஏனைய பிற்போக்கு சக்திகளுக்கு மறுமுகத்தையும் காட்டி ஆட்சிக்கட்டிலை அலங்கரித்துக் கொண்டு காலத்தை இழுத்தடிக்காமல் உறுதியுடனும் நிதானத்துடனும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண அரசுக்கும், ஜனாதிபதிக்கும் சர்வதேச சமூகம் காலஅவகாசத்துடன்கூடிய அழுத்தத்தைப் பிரயோகிக்கவேண்டும்.

சுனாமி அனர்த்தத்தைச் சாட்டாக வைத்து சர்வதேச சமூகத்தின் அனுதாபத்துடன் தனது கபடத்தனத்தின் மூலம் அரச திறைசேரியை நிரப்பும் ஜனாதிபதியின் ஜாலத்தைச் சர்வதேச சமூகம் கண்டுகொள்ளாது இருப்பதைத் தவிர்த்து, சுனாமியைப்போன்று பன்மடங்கு கொடிய உள்நாட்டு யுத்தத்தனால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் சுதந்திரத்தையும் அவர் தம் சுயநிர்ணய உரிமையையும் தமது அரசபயங்கரவாதத்தின் இரும்புக்காலணியால் மிதித்த நிற்கும் சிங்களப் பேரினவாத அரசுகளுக்கு முண்டுகொடுத்துக் கொண்டிருக்காது விரைந்து சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும், தமிழ் தேசியத்தின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்கவும், நடுநிலை பிறளாது செயலாற்றத் தங்களை வேண்டிக்கொள்கிறோம்.

தமிழ்மக்களின் பொறுமை சோதிக்கப்படுமானால், சோதனைக்கு உட்படுத்தப்படுமானால், தமிழினம் அடிமைப்பட்ட இனமாக சுதந்திரம் இழந்து சுயநிர்ணய உரிமையிழந்து இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுமானால் அது நிச்சயமாக தமிழர்கள் தமக்கென ஒரு தேசத்தைப் பிரகடனப்படுத்துவதைத் தவிர வேறு ஒன்றுக்கும் வழி வகுக்காது என்பதை இங்கு சுட்டிக் காட்டுவது எமது தலையாய கடப்பாடு என்பதையும் வெளிப்படுத்துகின்றோம் எனவும் தமது கடுமையான அதிருப்தியை வெளியிட்டு இது குறித்த மகஜர் ஒன்றையும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைத்துள்ளனர். (ப-19)


## புதிய தொலைத்தொடர்பு கோபுரம் யாழ்ப்பாணத்தில் திறந்துவைப்பு

"புதிய மடுகந்தை யாழ் STM-1" என்ற புதிய தொலைத்தொடர்புக் கோபுரம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இவ்வைபவம் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் யாழ் அலுவலகத்தில் நடைபெற்றது.

இப்புதிய கோபுரத்தைத் திறந்து வைப்பதற்கு கொழும்பிலிருந்து ஸ்ரீலங்கா ரெலிக்கொம் தலைவர் அனில் ஒபயசேகர, பிரதான நிறைவேற்று அதிகாரி சுகி அனன் மற்றும் அதிகாரிகள் சிலரும் வருகைதந்திருந்தனர்.

தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதிலிருந்துவந்த நெருக்கடிநிலைகளைச் சீராக்கும் நோக்குடன் இந்தப் புதியகோபுரம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (ப-19)



## பல்கலைக்கழகத்திற்கு

# மாணவர்களை தெரிவு செய்வதில் மாற்றங்கள் கொண்டு வரப்படும்

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் முறையில் மாற்றங்களைக் கொண்டுவருவது குறித்து அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது.

கல்விப் பொதுத்தாரதர உயர்தரப் பரீட்சையின் பின்னர் மாணவர்களை பல்கலைக்கழகங்களிற்குத் தெரிவுசெய்வதற்கென மற்றொரு பரீட்சையை நடத்துவது குறித்து அரச்சாங்கம் கவனம் செலுத்திவருவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் ரட்ணாயக்க தெரிவித்தார்.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஊடாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு இந்த யோசனைகள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த யோசனை அடிப்படையில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மற்றுமொரு பரீட்சையை நடத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த யோசனைகள் குறித்த பேசசுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இதுதொடர்பான மிக முக்கியமான பேச்சுவார்த்தை ஒன்று பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்குமிடையில் அண்மையில் இடம்பெற்றது. (க-4,9)

## கல்வியியற்......

### மனைப்பொருளியல்

கே.ரதிதேவி, மட்டக்களப்பு.

### கிறிஸ்தவ சமயம்

எஸ்.ஜெஸ்ரினா ஜெயந்திமலர் (மன்னார்), எல்.எமரின் சுதர்ஷினி (நாவாந்துறை).

### மட்டக்களப்பு

### சமூகக்கல்வி

எஸ்.மஞ்சுளா (செங்கலடி), வி.உமாபதி (கொக்கட்டிச்சோலை), எம்.ஜெயரூபன் (வவுனியா), என்.நந்தீஸ்வரன் (சுழிபுரம்), ஆர்.ராஜமோகன் (வவுனியா), கே.சயந்தன் (யாழ்ப்பாணம்), எம்.ஜ.சிராவ்டீன் (ஆரையம்பதி), எம்.தர்மசீலன் (வவுனியா), வி.ஆர்.வலன்ரினா டினேஷ் (சுன்னாகம்).

### ஆரம்பக்கல்வி

எம்.டிலானி (கல்லாறு), எஸ்.ஜெயராணி (குருக்கள்மடம்), எஸ்.கிரிசாந்தி (வந்தாறுமூலை), என்.சுதாஷினி (உப்போடை), வி.சுமதி (களுவாஞ்சிக்குடி), எஸ்.சௌதாமினி (கல்முனை), ஆர்.சிவதர்ஷினி (சுன்னாகம்), ஏ.சுமதி (காரைநகர்), ஆர்.தயாளினி (மட்டக்களப்பு), கதிர்காமத்தம்பி (சித்தாண்டி) என்.நிரோஜன் (கோட்டைக்கல்லாறு), ரி.சதீஸ்காந்தன் (கல்லாறு), வி.தில்லைநாதன் (நாவற்காடு),

### தொழில்நுட்பக் கல்வி

ஜி.புஷ்பகா (மட்டக்களப்பு), ஜி.கோபி (ஏறாவூர்-1), எம்.எஸ்.முகமட் அஸ்கர் (கிண்ணியா), கே.ரவிகுமார் (வவுனியா), எஸ்.சிவதாஸன் (அம்பாறை), ஆர்.செல்வகுமார் (ஏழாலை), பி.சுவேந்திரராஜா (கோட்டைக் கல்லாறு 2) இ.வரதராஜன் (மட்டக்களப்பு).

### தமிழ்

எல்.நிஷாந்தன் (இளவாலை), ஜே.ரூபராஜ் (மட்டக்களப்பு), பி.சற்குணராஜா (காரைநகர்), எஸ்.யோகசெல்வம் (உடுப்பிட்டி). (க-7)

# கண்காணிப்புக்குழுவுடன் படையினர் சந்திப்பு

(பொலநறுவை)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும், வெலிகந்தை 23 ஆம் படைப்பிரிவின் தளபதிக்கும் இடையில் நேற்று முன்தினம் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தன விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து தனது கடுமையான விமர்சனத்தை முன்வைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் ஆயுதம்தரித்த மூன்று குழுக்கள் 23 ஆவது படைப்பிரிவினுள் பிரவேசிப்பதற்கு எடுத்த நடவடிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே தனது விமர்சனங்களை வெளியிட்டுள்ளார்.

இச்சந்திப்புக்குறித்து கருத்துவெளியிட்ட இராணுவப் பேச்சாளர் தயாரட்ணாயக்க,

அண்மையில் நடைபெற்ற படுகொலை தொடர்பாக எமது நிலைப்பாட்டினை தெரிவித்து ஆலோசனை வழங்கவேண்டும் என கண்காணிப்புக்குழுவிடம் கேட்டுள்ளோம். இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறுமாயின் கடுமையான நடவடிக்கையினை எடுக்க நேரிடும் எனக் கூறினார்.

இப்படியான கொலைச் சம்பவங்களை கருணாவோ அல்லது விடுதலைப் புலிகளோ அல்லது இராணுவத்தினரோ எவராகவிருந்தாலும் அவர்களுக்கு எதிராக நாம் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் - குறள்

வலம்புரி

# கொபி அனான் மீது அர்த்தமற்ற ஆத்திரம்

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொலை செய்யப்பட்டமைக்கு ஐ.நா. செயலாளர் கொபி அனான் கண்டனம் தெரிவித்தமை தென்னிலங்கையில் பெரும் குழப்பத்தையும் பயப்பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் அவருடன் சென்ற போராளிகள் மீது பொலநறுவையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலில் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, வாகன சாரதி என ஆறுபேர் உயிரிழந்தனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருக்கும்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து நடந்த இத் தாக்குதலை ஐ.நா. செயலாளர் கொபி அனான் வன்மையாகக் கண்டித்து அறிக்கை விடுத்திருந்தார்.

உலக நாடுகளின் தலைமை அமைப்பாகக் கருதப்படும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக இருக்கக்கூடிய கொபி அனான் அவர்கள் மேற்படி கொலைச் சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை விட்டிருந்தமையானது தென்னிலங்கைப் பேரினவாதிகளுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் கொலையை ஐ.நா. செயலாளர் கண்டித்தமையானது விடுதலைப் புலிகள் அமைப்பை ஐ.நா. செயலாளர் அங்கீகரித்துவிட்டார் என்பதை தெரிவிப்பதாகவே அமைந்துள்ளது. இதனை ஏற்கனவே இப் பகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

இவ்வாறு ஐ.நா. செயலாளரால் விடுக்கப்பட்ட கண்டனத்தை ஜே.வி.பியினராலோ, பௌத்த பிக்குகள் அமைப்பாலோ ஜீரணிக்கமுடியவில்லை. அதனால் அவர்கள் கொதிப்பேறி ஐ.நா. செயலாளர் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருகின்றனர்.

ஐயா! இந்த உலகம் என்றுமே உண்மைகளைத் தன்னுள் மறைத்துக் கொண்டதாக வரலாறு இல்லை. உண்மைகள் என்றோ ஒரு நாள் விழித்துக் கொள்வது நிஜம்.

உண்மைகளை யார் மறைக்க முற்படுகின்றார்களோ அவர்கள் அதனாலேயே அவஸ்தைப் படுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இதற்கு தென்னிலங்கைப் பேரினவாதிகளின் தற்போதைய நிலை நல்லதோர் உதாரணமாகும். அதாவது ஈழத் தமிழ்மக்கள் மீது இராணுவம் மேற்கொண்ட தாக்குதல்கள், அதனால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை, சொந்த இடங்களைவிட்டு புலம்பெயர்ந்தமை தமிழ் இளைஞர் யுவதிகள் சிறைகளில் அடைக்கப்பட்டமை போன்ற நிட்டூரங்கள் நடைபெற்ற போதெல்லாம் உலக நாடுகள் முன்னிலையில் அவை இலங்கை அரசுகளால் மறைக்கப்பட்டன. சிங்கள பேரினவாதிகளால் தமக்கு இழைக்கப்படும் அநியாயங்களை உலக நாடுகள் தட்டிக் கேட்க மாட்டாதா? என்று ஏங்கிய தமிழ் மக்களுக்கு இன்று சர்வதேச ரீதியில் ஓர் அங்கீகாரம் கிடைத் துள்ளது. அதுவே ஐ.நா. செயலாளரின் அறிக்கையாகும்.

சுனாமி ஏற்படுத்திய அழிவுகளை பார்வையிடுவதற்காக இலங்கைக்கு வந்த ஐ.நா. செயலாளர் கொபி அனானை பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளுக்கு செல்ல அரசு தடை விதித்ததன் மூலம் கொபி அனான் உண்மைநிலையை புரிந்து கொண்டுவிட்டார். அதன் காரணமாகவே கௌசல்யனின் கொலையை அவர் வன்மையாக கண்டித்தார்.

இந்த உண்மையை ஜே.வி.பி. மற்றும் பௌத்த பிக்குகள் உணர்ந்து கொண்டால் குமுறிக் குளறவேண்டிய தேவை இருக்கமாட்டாது.

# காணாமல் போனோர் குறித்த விசாரணைகளுக்காக முறைப்பாட்டாளர்களுக்கு புலனாய்வுப் பிரிவினர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் 1996,1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள கீழ்க் காணும் நபர்கள் சம்பநதமாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காணாமல் போனவர்கள் சம்பந்தமான விசாரணைப் பிரிவினரால் விசாரணை மேற்கொண்டுள்ளார்கள்.

இவ் விசாரணைக்காக கொழும்பில் இருந்து காணாமல் போனவர்கள் சம்பந்தமான விசாரணைப் பிரிவினர் யாழ். வரவுள்ளனர்.

எனவே குறிப்பிட்ட பெயரையுடைய காணாமல் போனவர்களின் பெற்றோர், பாதுகாவலர் ,முறைப்பாட்டுக்காரர் அல்லது இவர்களில் எவரேனும் இடம்பெயர்ந்து அல்லது வெளிநாட்டில் வசிப்பவராயின் அவர்களது உறவினர்கள் கீழ்க் குறிப்படப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்திற்கு குறிப்பிட்ட திகதியில் உரிய ஆவணங்களுடன் வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

அந்த வகையில் எதிர்வரும் 22ஆம் திகதி யாழ். பொலிஸ நிலையத்தில் நடைபெறவுள்ள விசாரணைகளுக்கு, பாலசிங்கம் பாலகுமார்( கோவை இல.52), டி.சுரேஷ்குமார் இல. 1616, சென்ரல் றோட், யாழ். நகர் (கோவை இல.80), ஈ.நிக்ஸன் ஜெராட் இல. 215/16 ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் (கோவை இல.84), மார்க்கண்டு மகேஸ்வரன் கலாசாலை வீதி,திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்(கோவை இல.264), கே.ஜயகாந்தன் கல்வயல் ,யாழ்ப்பாணம்(கோவை இல.291), என். உதயகுமார் யாழ்ப்பாணம் (கோவை இல.297), பி.சதீஸ்வரன் கதிரகோவிலடி, திருநெல்வேலி யாழ்ப்பாணம் (கோவை இல.347),பாக்கியநாதன் ஜுலியன் (கோவை இல.350), பத்மநாதன பத்மராஜா ( கோவை இல.351),பட்குணசிங்கம் ராஜேந்திரன் ( கோவை இல.369),

ஆர்.ஆர்.லெபணான் இல. 115,கொலேஜ் வீதி,யாழ்ப்பாணம் (கோவை இல.401), ராஜேந்திரன் ராஜேஸ்வரன் இல. 1613 சீனியர்லேன்,கல்லடி யாழ்ப்பாணம் (கோவை இல.416), ரங்கன் ரோகன் (கோவை இல.456), ரெக்குனோ ருபராஜ் சவியதாஸ் இல.310 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (கோவை இல.457),எஸ். ராகிதவன் இல.9/9,சென்ரல் வீதி, குருநகர் யாழ்ப்பாணம்( கோவை இல.467), வி.மகிரோட் குலசேகரம் இல. 15/A, ராஜசிங்கம் வீதி குருநகர், யாழ்ப்பாணம்(கோவை இல. 720), சதீஸ்வரன்-பரமசோதி பத்திரகாளிகோவிலடி திருநெல்வேலி, யாழ்ப்பாணம், (கோவை இல.495),

சதீஸ்வரன் பத்திரகாளிகோவிலடி திருநெல்வேலி, யாழ்ப்பாணம (கோவை இல.496), செல்லத்துரை ஞானசம்பந்தன் இல. 16/5 சீனியர்லேன் வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம் (கோவை இல. 509), திருஞானசம்பந்தர் அல்லது பபா. இல.1615 சீனியர்லேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்( கோவை இல.700),

செல்வதுரை செல்வராஜா இல. 586, சென்செபஸ்ரியன் வீதி யாழ்ப்பாணம் (கோவை இல. 513), செல்வராஜா ரகுநாதன் (கோவை இல.531), யோகனான் இல 50/18,செட்டித்தெரு நல்லூர் (கோவை இல.765), திருவள்ளுவர் செல்லையா (கோவை இல.703), சோதிலிங்கம் சுரேஷ்குமார் அரசாலை வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம் (கோவை இல.612), சுகுமார் பூபாலசிங்கம் இல.13 ஜிந்துபிடி வீதி கொழும்பு-13, வதிவிடம் நுனாவில், சாவகச்சேரி., எஸ்.சிவாதரி ஏழாலை மேற்கு, ஏழாலை (கோவை இல. 466) ஆகியோருடைய உறவினர்களையும்,

இதைவிட 23 ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் விசாரனை நடைபெறும் விசாரணைகளுக்கு, ராஜா செந்தில்குமார் இல.20 கண்ணகிபுரம் வீதி, கந்தர்மடம் (கோவை இல.106), ராஜரத்னம் சிறிதரன் டச்சுறோட் கோப்பாய் தெற்கு, கோப்பாய் (கோவை இல.411),

ராஜா தனபாலசிங்கம் இல.24 பாம்வீதி, கந்தர்மடம் (கோவை இல.418), சுமதி சுரேஷ்வரன் இல.48/1 நெடுங்குளம் வீதி, கந்தர்மடம் கிழக்கு யாழ்ப்பாணம் (கோவை இல. 632), ராசமனோகரன் தயாபரன் புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் யாழ்ப்பாணம் (கோவை இல.419), தணிகாசலம் சுதர்சினி தாவடிச்சந்தி, கோண்டாவில் (கோவை இல.666), எஸ். சாருபன் கோபபாய் தெற்கு, கோப்பாய் (கோவை இல. 469), செல்வகுமார் கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் (கோவை இல.520), சின்னத்தம்பி மகேஸ்வரன் புகையிரத நிலையவீதி,கோண்டாவில் (கோவை இல.565), சின்னத்துரை பிரபாகரன் கோப்பாய் தெற்கு,கோப்பாய் (கோவை இல. 582) ஆகியோருடைய உறவினர்களையும்,

அத்துடன் 24 ஆம் திகதி ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் நடைபெறும் விசாரணைகளுக்கு,பாலரத்னம் ஜயமோகன் இல.189 ஜின்னா வீதி,மானிப்பாய் (கோவை இல.51), கனகசபை வைத்தியலிங்கம், நீர்வேலி (கோவை இல.163),

சிங்காரவேல் யோகேந்திரன் ஆனைக்கோட்டை (கோவை இல.552), துரைநாயகம் ரத்னம் மானிப்பாய் வீதி, கல்வண்டி, ஆனைக்கோட்டை (கோவை இல.708), சின்னத்தம்பி திலீபன் மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை (கோவை இல.576), சிவகுருநாதன் அருட்செல்வம் ஆனைக்கோட்டை (கோவை இல.593), சிவலிங்கம் சசிகரன் இல. 687/24 ஓட்டுமடம் வீதி, மானிப்பாய் (கோவை இல.596), சவுந்தரநாயகம் எட்வின் உயரப்புலம் ஆனைக்கோட்டை (கோவை இல.613), சிறி ரெங்கநாதன் சிறிகாந்த் சுதுமலை தெற்கு, மானிப்பாய், (கோவை இல.614), ராஜரட்ணம் சிறிதரன் டச்சுவீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய், (கோவை இல.411), சின்னத்துரை பிரபாகரன் கோப்பாய் தெற்கு கோப்பாய் (கோவை இல.582), எஸ்.செல்வரஞ்சன் இல.25/7 கோப்பாய்வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம், (கோவை இல.471), பிரான்ஸிஸ் சேவியர் ரொஷான இல.46 சவன்யா வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம் (கோவை இல.94), பூபாலசிங்கம் பிரபாகரன் கைதடி தெற்கு கைதடி (கோவை இல.346), பூர்ணசந்திரன் செல்வகுமார் தச்சன்தோப்பு கைதடி (கோவை இல.389), கணபதி குமாரவேல் பலாலி தெற்கு கொடிகாமம் (கோவை இல.165), சினனத்தம்பி விக்னராஜா கோவில் குடியிருப்பு, சாவகச்சேரி (கோவை இல.579) ஆகியோர் தொடர்பாக முறைப்பாட்டுக்காரர்களுக்கு அழைப்பு விடுககப்பட்டுள்ளது.

(ப)

# சுகாதார ஊழியர்களின் விடுமுறையை ரத்துச் செய்யும் சுற்றறிக்கை நிறுத்தம்

(கொழும்பு)

சுகாதார சேவை ஊழியர்களின் விடுமுறையை ரத்துச் செய்யும் சுற்றறிக்கை இடைநிறுத்துவது குறித்து சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அடுத்த வாரமளவிலேயே இந்த விடயம் குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் விமல் ஜெயலதிலக்க தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர சேவைகளுக்காகவே சுகாதார ஊழியர்களின் விடுமுறையை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், விடுமுறையை ரத்துச்செய்யும் தேவை தற்போது இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை, சுகாதார சேவை ஊழியர்களின் விடுமுறையை ரத்துச் செயயும் சுற்றறிக்கை துரிதமாக இடைநிறுத்துமாறு குறிப்பிட்டு சுகாதார சேவை தொழிற்சங்கக் கூட்டமைப்பு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

(க-9)

# அவுஸ்திரேலிய தூதுவராக பாலபட்டபெண்டி; ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சந்தேகம்

(கொழும்பு)

பாலபட்டபெண்டியை அவுஸ்திரேலியாவிற்கான உயர்ஸதானிகராக நியமித்தமை தொடர்பில் அவரை உயர் பதவிகளுக்கு தெரிவு செய்வதற்கான பாராளுமன்றக் குழுவின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி இவ்வாரம் சபாநாயகர் டபிள்யூ ஜே. எம்.லொக்கு பண்டாரவை கேட்கவிருக்கிறது.

கடந்த 8ஆம் திகதி பாலபட்டபெண்டியின் பெயர் அற்றதான மேற்படி குழுவின் அங்கத்துவ பத்திரம் கையளிக்கபட்டிருந்தது. ஆனால் அவர் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவே இது தொடர்பில் அவரிடம் விசாரணைகள் நடத்தப்பட வேணடும் என ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகிறது. முன்னர் ஊடகங்கள் வெளியிட்ட அறிக்கைகளின் படி பாலபட்டபெண்டியின் மகன் ஹரேந்திராவுக்கு அவுஸ்திரேலியாவில் மில்லியன் கணக்கான சொத்துகள் இருக்கின்றன எனத் தெரியவந்திருந்தது.

மேற்படி உயர் பதவிகளுக்காக தெரிவுசெய்யப்படுபவர்களின் பெயர்ப்பட்டியலில் இவரின் பெயர் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவரின் நியமனத்திற்காக அக்குழுவில் அங்கீகாரம் கோரப்படவில்லை.

கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் சமுகமளித்திருந்த கருஜெயசூரிய, முன்னறிவித்தல் எதுவுமின்றி பாலபட்டபெண்டி அங்கு சமுகமளிக்கிருந்ததை கடுமையாக எதிர்த்திருந்தார்.

ஆயினும் அது கவனத்தில் எடுக்கப்பட்டிருக்காது. அவரின் நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது அக்கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அங்கத்தவர்களே பெருமளவில் சமுகமளித்திருந்தனர்.

(க-6)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நீங்கள் கடவுளைக் கண்டாக வேண்டும். ஆன்மாவை உணர்ந்தாக வேண்டும். அது தான் செயல்முறை மதம். எளிய உள்ளம் படைத்தவர்கள் பாக்கியவான்கள் .ஏனெனில் பரலோக சாம்ராஜ்யம் அவர்களுடையது என்று இயேசு போதித்தார். செயல்முறை மதம் என்று இதை நீங்கள சொல்வதில்லை. அது என்ன வெறும் வேடிக்கைப் பேச்சா?

சுவாமி விவேகானந்தர்

# தொடரும் படுகொலைகளை தடுக்க நடவழிக்கை எடுக்கவேண்டும்

## ஐ.நா செயலருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதில் தமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக அவர்கள் பல விட்டுக்கொடுப்புக்களையும் செய்து வருகின்றனர்.

இவ்வாறு வடபிராந்திய முச்சக்கரவண்டிகளின் உரிமையாளர் சங்கத்தினரால் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம், நோர்வே சமாதான அனுசரணையாளர்கள் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ். நகரில் தனியார் வாகன உரிமையாளர் சங்கத்தின் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கண்டனப் பேரணியின் முடிவில் முச்சக்கர மோட்டார் ஊர்திச் சங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இவ் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வில் உறுதியாகவுள்ளது. எத்தகைய விலைகொடுத்தாயினும் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமென அவர்கள் இரவுபகலாக உழைத்துவருகிறார்கள்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் வன்னியிலிருந்து கிழக்கிற்குச் சென்றுகொண்டிருந்தபோது வெலிகந்தவில் அவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

வடக்குக் கிழக்கு மாத்திரமல்ல தென்னிலங்கையும்கூட இச்சம்பவத்தைக் கண்டித்திருக்கிறது.

நிரந்தரமான இன ஒற்றுமைக்கான தீர்வுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் போராடிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் கண்காணிப்புநடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

வருங்காலத்தில் கண்காணிப்புக்குழு இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்கப் போராடுமென நம்புகின்றோம் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(ப-19,43)

### முஸ்லிம்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மார்ஷல், மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு, விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி உட்பட விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினர் பலரும் கலந்துகொண்டனர்.

முஸ்லிம்கள் சார்பில் பள்ளிவாசல்கள், முஸ்லிம்கள் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 20 பேர் கொண்ட குழுவினரும் அம்பாறை மாவட்டதிலிருந்து 15 பேர் கொண்ட முஸ்லிம் குழுவினரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை மட்டு - அம்பாறை மாவட்டத்தில் வாழும் கரையோர முஸ்லிம் மக்களுடைய நிலை தொடர்பாக ஆராயும் முகமாக இக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்ததாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார்.

இச்சந்திப்பானது மகிழ்வானதும் நிறைவானதுமாக அமைந்தது.

எங்களுடைய தேசியத் தலைவரின் பணிப்புக்கிணங்க முஸ்லிம் சகோதரர்களுடைய தலைவர்களையும், சமயத் தலைவர்களையும் சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகள் குறித்தும், நெருக்கடிகள் சம்பந்தமாகவும் அதற்கு எப்படி தீர்வு காண்பது என்பது தொடர்பாகவும் அவர்களோடு நாங்கள் மனம்விட்டுப் பேசியிருக்கின்றோம்.

அவர்களும் தங்கள் மக்கள் சார்பாக நிறையப் பிரச்சினைகளை முன்வைத்தார்கள். அதற்கு நாங்கள் எதிர்காலத்தில் விரைந்து தீர்மானம் எடுக்கவேண்டும் என்று புரிந்துகொண்டோம்.

சில நிர்வாக முரண்பாடுகள் சிக்கல்கள் காரணமாக பல விடயங்களை நிறைவேற்ற முடியாததொரு இக்கட்டான நிலையில் இருக்கின்றோம் என்பதை விளக்கியுள்ளோம்.

அதேவேளை இந்த மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைக்குள் அரசியலைப் புகுத்துவதால் எங்களுடைய மக்களின் பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வுகாண இயலாதென அவர் மேலும் தெரிவித்தார்.

(த-04)

## நள்ளிரவுவேளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிவந்த
## யுவதியை இறக்கிவிட்டுவிட்டு தலைதெறிக்க தப்பிஓடிய இளைஞர்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சந்தியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளம்பெண் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் கோப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி சிறிசெல்வம் தலைமையிலான பொலிஸ்குழு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயமே இப்பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பெண் (வயது 24) கண்ணபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்றும் தற்போது சுழிபுரத்தில் வசித்துவருபவர் என்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 2 மணியளவில் இளம்பெண் ஒருவரை தமது மோட்டார் சைக்கிளில் ஏற்றிவந்த இளைஞர்கள் சிலர் கோண்டாவில் சந்தியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாரைக் கண்டதும் அவரைத் திடீரென இறக்கிவிட்டு மோட்டார் சைக்கிளை திருப்பிக்கொண்டு தலைதெறிக்க ஓடித்தப்பினர். பொலிஸார் அவர்களைப் பிடிக்க முயன்றபோதும் அது கைகூடவில்லை.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட பெண் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

விசாரணையின்போது தம்மிடம் இருந்த 15 பேருக்கு மேற்பட்டவர்களின் தொலைபேசி இலக்கங்களை பிரஸ்தாப பெண் பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

பிரஸ்தாப பெண்ணுடன் தகாத முறையில் தொடர்புவைத்திருந்தவர்களின் தொலைபேசி இலக்கங்களாக அவை இருக்கலாமெனவும், மேற்படி தொலைபேசி இலக்கங்கள் சிலவற்றுடன் தாம் தொடர்பை ஏற்படுத்தியிருப்பதாகவும், அந்த இலக்கங்களை வெளியிடவுள்ளதாகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை கைதுசெய்யப்பட்ட யுவதி நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் பிரஸ்தாப பெண்ணின் மருத்துவ பரிசோதனை அறிக்கையை யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடமிருந்து பெற்று அடுத்த வழக்குத் தவணையின் போது மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

(த-19)

## 100 மீ. அப்பால் வீடுகளை அமைக்க விளக்கமளிக்கும் மாநாட்டுக்கு ஏற்பாடு

(கொழும்பு)

கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்கு அப்பால் வீடுகளை அமைக்கவேண்டுமென அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தின் பிரகாரம் விஞ்ஞான மற்றும் சமூக பொருளாதார பின்னணி தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் மாநாடு ஒன்றை உள்நாட்டு வெளிநாட்டு விஞ்ஞானிகளின் பங்குபற்றுதலுடன் நடாத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களுடனான கூட்டத்திலேயே ஜனாதிபதி இக்கருத்தை வெளியிட்டார். இந்தியாவில் கடற்கரை எல்லை கடந்த பல வருடங்களுக்கு முன்னரே 500 மீற்றராக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

இதனால் சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களை அங்கு குறைத்துக்கொள்ள முடிந்திருக்கிறது. இல்லையேல் இந்தியாவில் சுனாமி அனர்த்தம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பல லட்சங்களாக இருந்திருக்கும்.

இதனால் ஆகக்குறைந்தது 100 மீற்றர் தூரத்திற்கு அப்பால் என்றாலும் வீடுகளை அமைக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது என ஜனாதிபதி தெரிவித்தார். (த-04)

### யுத்தநிறுத்த உடன்பாட்டை...

காலமும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவில்லை? இதனால் முன்னெடுக்கப்பட்டுவந்த சமாதான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதனை முன்னெடுக்கமுடியாத நிலையையும் உருவாகியுள்ளது.

இதனால் கடந்த மூன்று வருடங்களாக கட்டுக்கோப்புடன் பாதுகாக்கப்பட்டு வந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ளது. அது எவ்வேளையிலும் முறிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதனால் அதனைத் தொடர்ந்து பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கே உண்டு. ஆனால் அதனை விடுதலைப் புலிகள் முறியடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே இருக்கின்றது. ஏன் என்றால் அவர்கள் முறியடிக்க விரும்பினால் தமது உறுப்பினர்கள் ஒவ்வொருவராக கொலை செய்யப்பட்டவேளையே இதனைச் செய்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை. அதற்கு எமது கட்சியின் ஆதரவு என்றும் இருக்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

(த-04)

### சுனாமி "பேபி 81"...

பிரஸ்தாப குழந்தையையும் மரபணுச் சோதனைக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். கொழும்பில் கடந்தவாரம் மரபணு சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனை முடிவு நேற்று கல்முனை நீதிமன்றுக்கு அனுப்பப்பட்டது.

முடிவு பற்றி கல்முனை நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ்.நஸீர் தெரிவிக்கையில், குழந்தையின் பெற்றோருக்கு முடிவு குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நீதிமன்றால் உத்தியோகபூர்வமாக குழந்தை பெற்றோரிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தமது குழந்தையின் பெயர் அபிலாஷ் எனவும் தமது குழந்தை தமக்கு மீண்டும் கிடைபபதையிட்டு தாம் பெரும்மகிழ்ச்சியடைந்துள்ளதாக பெற்றோர் கூறுகின்றனர். (த-04)

### கொபி அனானுக்கு...

தேசிய பிக்குமார் முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கொலைசெய்யப்பட்டதை ஐ.நா. செயலர் கொபி அனான் கண்டிக்கவேண்டிய அவசியம் ஏதுமில்லை.

கௌசல்யனின் கொலைக்கு ஐ.நா. செயலர் வெளியிட்ட கண்டன அறிக்கை இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் விடயமாகும்.

பயங்கரவாதத்திற்கும், பிரிவினைவாதத்திற்கும் ஒத்துழைப்பு வழங்குவதாகவே ஐ.நா. செயலரின் நடவடிக்கை அமைந்துள்ளது. இது ஐ.நா. சாசன விதிகளுக்கு முரணானது.

எனவே இதற்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டி கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம். இதன்மூலம் ஐ.நா. செயலர் தவறை வெளியுலகிற்கு கொண்டுவரவுள்ளோம் என்று முன்னணியின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி என்பனவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் ஐ.நா. செயலரின் கண்டனத்தை விமர்சித்து, இதற்கு ஐ.நாவின் நிலைப்பாடு என்ன என்பதை தெளிபடுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-4)

**யாழ்ப்பாண மாநகரசபை**

**துரையப்பா விளையாட்டரங்கு**
**மேற்பார்வையாளர் பதவி**
**(ஒப்பந்த அடிப்படை)**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாண மாநகரசபையினால் கோரப்படுகின்றது.

**தகைமை:-**

விண்ணப்பதாரி ஒரு விளையாட்டு உத்தியோகத்தராக உள்ளவராகவோ அல்லது விளையாட்டு உத்தியோகத்தராக இருந்து ஓய்வுபெற்றவராகவோ இருக்கவேண்டும்.

நல்ல தேகாரோக்கியம் கொண்டவராக இருப்பதுடன், இதற்கு முன்னர் குறைந்தது 05 வருட சேவையாற்றியதற்கான அனுபவச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**முடிவுத் திகதி :-** 28.02.2005 ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல்வேண்டும்.

**கலாநிதி க.குணராசா**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-1086)

**மனோகரா**

10.30, 2.30 காட்சியாக
இளம்புயல் ஜெயம் ரவி, அசின், நதியா, விவேக் நடித்த
M. குமரன்
SON OF MAHALUSHMI
6.30, 9.30 காட்சியாக
18.02.05 முதல் சிறப்புத் தோற்றத்தில்
திருப்பாச்சி
இளைய தளபதி விஜய், ரவிகிருஷ்ணா, நதிஷா

**நாதன்ஸ்**

யாழ்ப்பாணம்
இன்றுமுதல்
காலை10.30,2.30இற்கு
பரத், சந்தியா நடித்த
காதல்
டைடானிக் (தமிழாக்கம்)



LEOLARD - DICAPRIO - KATE
6.30, 9.30 இற்கு

**நிரஞ்சனாஸ்**

சங்கானை
விஜயகாந், லஜா, சீதா, சரத்பாபு, ராதாரவி மற்றும் பலர் நடித்த



கஜேந்திரா
கா.நே -11.00, 2.45, 6.00 (பு.நே)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.